பக்கங்கள்:-33

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 29 | ஞாயிற்றுக்கிழமை | 12.05.2024 | அதிர்வு 285

## நினைவேந்தல் வார

## ஊர்திப் பவனி இன்று ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும், முள்ளிவாய்க்கால் 06

# அறவழிப் போராட்டத்துக்கு சுமந்திரன் அறைகூவல்!

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி அறிக்கை



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

"தமிழர்களின் போராட்டம் நீதிக்கான போராட்டம், நியாயமான அரசியல் உரிமைகளுக்கான போராட்டம். அநீதி, அநியாயம் ஒருபோதும் வென்றதில்லை, எமது போராட்டம் நீண்ட நெடியதானதாக இருந்தாலும், அறவழியில் சாத்வீக முறைகளைக் கைக்கொண்டு அதிலிருந்து அணுவளவும் பிசகாமல் போராடுவோமானால் எமக்கான நீதி கிடைத்தேயாகவேண்டும். அப்படியானதொரு தூய்மையான அறவழிப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு அனைவருக்கும் அறைகூவல் விடுக்கின்றேன். எதிர்காலத்தை நோக்கி நம்பிக்கையோடு சேர்ந்து பயணிப்போம்."

-இவ்வாறு இலங்கைத்தமிழரசுக்கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். 06

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் மே 18 ஆம் திகதி அனைவரும் அணிதிரள்வோம்

### நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"இன்றுவரை நீதி வழங்கப்படாத இனப்படுகொலையின் இவ்வருடத்துக்கான நினைவேந்தல் எதிர்வரும் 18ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடைபெறும். எனவே, அனைவரும் பேதங்களைத் துறந்து, சுயலாப, சுய விளம்பரப்படுத்தல்களைக் கடந்து எமது பொது நிகழ்ச்சி நிரலில் ஒன்றுபட்டு தமிழர்களாக இந்த நினைவேந்தலில் ஒன்றிணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்."

– இவ்வாறு 07



# கம்பனிகளுடன் எவ்வித சமரசமும் கிடையாது!

### இ.தொ.கா. திட்டவட்டம்



(எஸ்.கீதபொன்கலன்)

பெருந்தோட்டக் கம்பனிகளுடன் எந்தவித சமரசமும் கிடையாது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

"தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 1,200 ரூபா வழங்கப்படும்" என்று முதலாளிமார் 06




உயர்நீதிமன்றத்தீர்ப்பினால் டயானா கமகேயின் நாடாளுமன்ற உறுப்புரிமை பறிபோனமையை அடுத்து இப்போது மேலும் இரண்டு அமைச்சர்களின் பதவிகள் பற்றிப் பேசப்படுகின்றது.

இருவரும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ரணில் பக்கம் குத்துக் கரணம் அடித்து அமைச்சர்களானவர்கள். ஜனாதிபதி ரணிலுக்கு மிக நெருக்கமானவர்கள். ஒருவர் ஹரீன் பெர்னாண்டோ. மற்றவர் மனுஷ நாணயக்கார.

இருவரும் கட்சி முடிவுக்கு மாறாக அமைச்சர் பதவியை ஏற்றமையை ஒட்டி, அவர்களுக்கு எதிராகக் கட்சி ஒழுங்கு 06

# இளைஞர்களிடையே வேகமாக பரவி வருகிறது டினியா தொற்று

டினியா எனப்படும் தோல்நோய் இளைஞர்களிடையே வேகமாக பரவி வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இறுக்கமான நைலோன் கலந்த ஆடைகளை அணிவதனால் இந்த நோய் நிலைமை ஏற்படுவதாக தோல் நோய்கள் தொடர்பான விசேட வைத்தியர் நயனி மாதாரசிங்க தெரிவித்துள்ளார்.

டினியா எனப்படும் இந்த நோயானது பூஞ்சை தொற்றினால் பரவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நோய்க்கான உரிய சிகிச்சைகள் காணப்பட்டாலும் அவை முறையாக வழங்கப்படாமையினால், நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மந்த நிலையை அடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.



தகுதி வாய்ந்த வைத்தியர்களிடம் இதற்கான சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# முள்ளிவாய்க்கால் - காசா ஓர் ஒப்பீடு இன்று நிகழ்நிலையில் உரையாடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தமிழினப்படுகொலை - நிகழ்நிலைக் கருத்துப்பகிர்வு "முள்ளிவாய்க்கால் - காசா ஓர் ஒப்பீடு!" எனும் தலைப்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 07 மணியளவில் நிகழ்நிலையில் சூம் செயலியூடாக நடைபெறவுள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

மே 18 தமிழினப் படுகொலையை மக்கள் மயப்படுத்தும் ஒன்றியத்தின் முயற்சியின் ஓர் அங்கமாக முன்னெடுக்கப்படும் இக் கருத்துப்பகிர்வில் ஊடகவியலாளர் அ.நிக்ஸன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

இன்று குழப்பமடைந்திருக்கும் உலக அரசியல் ஒழுங்கு இலங்கைத்தீவு போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு எத்தகையை சாதக, பாதகத் தன்மைகளை உருவாக்குகின்றது என்பது பற்றிய ஓர் அவதானிப்பும், அரசியல் விடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழர்கள் எவ்வாறான அணுகு முறைகளைக் கையாள வேண்டும் என்பது பற்றிய உரையாடல் இது குறிப்பாக இஸ்ரேல் - பலஸ்தீனம் பற்றிச் சர்வதேச நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டு வழக்கு விசாரணைகளும் ஈழத்தமிழர்களுக்குக் கற்றுத் தரும் பாடம் தொடர்பாக முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை மாதத்தில் தெரிந்து கொள்வதற்கான ஏற்பாடாக ஏற்று இந்நிகழ்நிலைக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு அனைவரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைத்து நிற்கின்றது என ஒன்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Zoom Link
https://us06web.zoom.us/j/81312088728?pwd=14WAOb-2ZeaQEmn3uPVbW7BiSc6oL6p.1
Meeting ID: 813 1208 8728
Passcode: Jusu@2024

CLICK HERE VIDEO

# யுக்திய தேடுதல் நடவடிக்கையின் போது ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கைது



யுக்திய சோதனை நடவடிக்கையின் கீழ் நாடளாவிய ரீதியில் இதுவரை ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 74 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கைது செய்யப்பட்டவர்களில் 4 ஆயிரத்து 472 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையின் கீழ் 41 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் 43 கிலோகிராம் ஐஸ் ரக போதைப்பொருள் உள்ளிட்ட கணிசமான அளவு போதைப் பொருள்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.




# பாலஸ்தீனத்திற்கு ஐ.நாவில் இடம்; இலங்கை ஆதரவாக வாக்களிப்பு

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறுவதற்கான பாலஸ்தீனத்தின் விண்ணப்பத்துக்கு ஆதரவாக இலங்கை வாக்களித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது எக்ஸ் தளத்தின் மூலம் இதனை அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் புதிய உறுப்பினர்களை இணைப்பது என்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானத்தின் ஊடாக எடுக்கப்பட்ட இந்த முடிவு, சர்வதேச அரங்கில் சமாதானம் மற்றும் நீதிக்கான இலங்கையின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பைக் குறிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சூழ்நிலை சிக்கலான போதிலும் ஒரு அமைதியான தீர்வைப் பின்பற்றுவது பாலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் மிகவும் சாத்தியமான பாதையாக உள்ளது என இலங்கை நம்புகிறது.

பாலஸ்தீனத்தின் ஐக்கிய நாடுகள் உறுப்புரிமைக்கான முயற்சியை ஆதரிப்பதில் பெரும்பான்மையான சர்வதேச சமூகத்துடன் இலங்கை இணைந்துள்ளது.

இதன்மூலம் நீண்டகாலமாக நீடித்து வரும் இஸ்ரேல் – பாலஸ்தீன மோதலுக்கு விரிவான மற்றும் நியாயமான தீர்வொன்றின் அவசரத் தேவையை எடுத்துரைத்து மோதலில் இராஜதந்திரத்தை வலியுறுத்தும் சக்திவாய்ந்த செய்தியை இலங்கை அனுப்பியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறுவதற்கான பாலஸ்தீனத்தின் விண்ணப்பத்திற்கான வாக்கெடுப்பில் இலங்கை உள்ளிட்ட 143 நாடுகள் ஆதரவாகவும் 9 நாடுகள் எதிராகவும் வாக்களித்திருந்தன.

# தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்த நடவடிக்கை

## மே 26 முதல் ஜூன் 01 வரை முன்னெடுப்பு



தேசிய டெங்கு ஒழிப்பு வாரமொன்றை பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

17 மாவட்டங்களில் 71 சுகாதார உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மழையுடனான காலநிலையையடுத்து டெங்கு அபாயம் மீண்டும் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# வவுனியாவில் 15 வயது சிறுமியின் மீது கூட்டு வன்புணர்வு: உடந்தையாக செயற்பட்ட பெண் உட்பட நால்வர் கைது!

(கே.வசந்தன்)

வவுனியா, தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து 15 வயது சிறுமி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த 15 வயது பெண் ஒருவரை வவுனியா நகரை அண்டிய தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றிற்கு அழைத்து சென்ற இளைஞர் ஒருவர் அச்சிறுமிக்கு போதை மருந்து கொடுத்து கூட்டு வன்புணர்வில் ஈடுபட்டார் எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அண்மையில் சிறுமியின் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து பெற்றோர் சிறுமியிடம் விசாரித்ததில் சிறுமி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்களை அணுகிய சிறுமியின் பெற்றோர் அவர்களின் வழிப்படுத்தலில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த வவுனியா பொலிஸார் கூட்டு வன்புணர்வுக்கு உடந்தையாகச் செயற்பட்டார் என அவரது உறவினரான 20 வயது பெண் ஒருவரையும், வன்புணர்வில் ஈடுபட்ட சந்தேகத்தில் வவுனியா நகரப் பகுதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் கடமையாற்றும் இளைஞன் உட்பட மூன்று இளைஞர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறுமியிடம் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலம் ஜூ னில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“பொருளாதார நெருக்கடியின்போது குடும்பத்தைக் கவனிப்பதில் பெண்கள் எதிர்கொண்ட சவால்களை நான் நன்கு அறிவேன். பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் முதன்முறையாக பெண்களை வலுவூட்டும் வகையில் அரசாங்கம் இரண்டு சட்டமூலங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொது இடங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு நிகழும் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான “உலகளாவிய வன்கொடுமை எதிர்ப்பு சைகைகள்“ 3 கை முத்திரைகளை வெளியிடும் நிகழ்வு நேற்று கொழும்பு தாமரைத்தடாக அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில் –

“அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரே அளவிலான கல்வியை நாம் வழங்க முடியாது. ஆனால் தொழில்நுட்பத்தின் மூலம், அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரே அளவிலான கல்வி வழங்கும் திட்டத்தை செயல்படுத்த முடியும்.

பெண்களுக்கு நிகழும் வன்முறைகளுக்கு எதிராக சைகைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது இன்று இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரான சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வருகிறோம். பெண்களுக்கு எதிரான வன்முறையை எப்படி நிறுத்துவது என்பதை இந்த கை சமிக்ஞைகள் தெரிவிக்கும். பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதில் உறுதியாக உள்ளோம். அதை வார்த்தைகளுக்குள் மட்டுப்படுத்த முடியாது. இந்தச் சைகைகள் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை சமூகம் உணர்ந்து அதற்கு எதிராகப் போராட முடியும்.

இது குறித்து பரந்த அளவில் பேசப்படும் என நம்புகிறேன். நம் நாட்டில் செல்வந்தர்கள், நன்கொடையாளர்கள் என்ற இரு வகையினர் உள்ளனர். நன்கொடையாளர்கள் சம்பாதித்து சமூக சேவை செய்பவர். தம்மிக்க பெரேரா அவ்வாறான ஒருவர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக பெண்களுக்கு வலுவூட்டும் இயலுமை இந்தத் திட்டத்திற்கு உள்ளது.

பொருளாதார நெருக்கடியின்போது பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். உணவுத் தட்டுப்பாடு காரணமாகவும் பெண்கள் மிகவும் அவதிப்பட்டனர். சில குடும்பங்கள் பெண்களால் வழிநடத்தப்பட்டன. அதனால் பெண்களை வலுவூட்ட எதிர்பார்க்கிறோம். பெண்கள் வலுவூட்டலுக்கான சட்டம் மற்றும் பாலின சமத்துவச் சட்டம் என்பன நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளன.

பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டல் தொடர்பான தேசியக் கொள்கையை அமுல்படுத்துதல், தேசிய மகளிர் ஆணைக்குழுவை நிறுவுதல், பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறிமுறையை நிறுவுதல், பெண்களின் உரிமை மீறல்களுக்கு வழக்குத் தாக்கல் செய்தல் உள்ளிட்ட நோக்கங்களை கொண்டு இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் பெண்கள் உரிமை பாதுகாப்பு ஆணைக்குழு ஒன்றும் நிறுவப்படவுள்ளது. எந்தப் பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்தாலும் அதற்கான தீர்வுகளை ஆணைக்குழு வழங்கும்.

மேலும், கல்வித் துறையில் பெண்கள் மிகவும் வெற்றிகரமானவர்களாக மாறி வருகின்றனர். பெண்களுக்கு முன்னாலிருக்கும் தடைகளை நீக்க வேண்டியது நமது பொறுப்பாகும். பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மன்றம் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கும் இது சார்ந்த பொறுப்புகள் உள்ளன. பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்த்து சமூக நீதியை நிலைநாட்டவே நாங்கள் பாடுபடுகிறோம்.

இரண்டு சட்டங்களையும் ஜுன் மாதம் நிறைவேற்ற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் நான் ஏற்கனவே பிரதமருடன் கலந்துரையாடியுள்ளேன். நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை குறைந்தபட்சம் 25 வீதமாக அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அத்துடன், மாகாண சபைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம்.

மேலும், பெண்களின் அரசியல் உரிமைகளை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். 2030 ஆம் ஆண்டுக்குள் பெண்கள் அரசியல் கட்சியை அங்கீகரிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்.

இலங்கையில் பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவும் பெண்களுக்கு உரிய அந்தஸ்த்தை வழங்கவும் முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறோம்.”– என்றார்.












INDSRI FERRY
யாழ்
↕
நாகை
13/05/24
இல் இருந்து தினசரி
"சிவகங்கை" பயணிகள் கப்பல்
சேவை
துட்டு இருந்தால் வாங்கலாம் பட்டு
• சேலை துணிமணிகள் வாங்க
• சமயச் சுற்றுலாக்கள்
• அழகிய கடற்கரைகள்
மேலும் அனுபவிக்க ...
ரூ 15,000 *
இல் இருந்து
www.sailindsri.com
பதிவுகளுக்கு
Google play
Download on the App Store
*ஒரு வழிக் கட்டணம் (வரிகள் இன்றி )

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கை எடுத்து, கட்சியிலிருந்து அவர்களை வெளியேற்றியுள்ளது. அதனால் அவர்கள் தத்தமது எம்.பி. பதவிகளை இழக்கின்றனர் என்பது கட்சியின் – ஐக்கிய மக்கள் சக்தியின் – முடிவு. அதை எதிர்த்து இருவரும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கு விசாரணை முடிந்து விட்டது. ஆனால் தீர்ப்பு வழங்கப்படாமல் விடயம் நான்கு மாதங்கள் தாண்டியும் இழுபட விடப்பட்டிருக்கின்றது.

இரண்டு வழக்குகளிலும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பிலும், அதன் தலைவர் சஜித் பிரேமதாஸ சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனே முன்னிலையாகி வாதாடியிருந்தார்.

இத்தகைய வழக்குகளில் ஓர் எம்.பி. கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டால், அவர் அதை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்ய ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படுகின்றது. அந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இரண்டு மாதங்களில் உயர்நீதிமன்றம் வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டும் என்பது அரசமைப்பு விதி.

மேற்படி இருவரும் கட்சி மாறி இரண்டு வருடங்களாகின்றன. வழக்குத் தாக்கலாகி ஒரு வருடத்திற்கு பின்னர்தான் உயர்நீதிமன்றம் விசாரணையே நடத்தியது. விசாரணை முடிந்து நான்கு மாதங்களாகின்றன. தீர்ப்பு வழங்கப்படவில்லை.

வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற ஆயத்தின் தலைவரான நீதியரசர் விஜித் மழல்கொட வரும் ஓகஸ்டில் – இன்னும் மூன்று மாதங்களுக்குள் – ஓய்வு பெறுகின்றார். அதற்கு முன்னர் வழக்கின் தீர்ப்பு எப்படியும் வழங்கப்பட வேண்டும்.

இந்த வழக்கின் தீர்ப்புக் குறித்து எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றச் சிறப்புரிமை என்ற பாதுகாப்பைக் கவசமாக வைத்துக் கொண்டு, உயர்நீதிமன்றத்தின் செயற்போக்கை அம்பலப்படுத்தும் ஒரு விசேட அறிவிப்பை நாடாளுமன்றத்தில் அண்மையில் வெளியிட்டிருக்கின்றார்.

'இந்த இருவர் தொடர்பான – ஹரீன் மற்றும் மனுஷ சம்பந்தமான – உயர்நீதிமன்ற வழக்கை விசாரித்த மூன்று நீதியரசர்கள் குழாமில் இருவர் தங்கள் தீர்ப்பை ஏற்கனவே எழுதி விட்டனர். ஆனால் மூன்றாவது நீதியரசர் தீர்ப்பை எழுதாமல் இழுத்தடிக்கின்றார். அதன் மூலம் இவ்வழக்குகளின் தீர்ப்பு வழங்கப்படாமல் இழுபட அவர் வேண்டுமென்றே வழி செய்கின்றார். இந்த நிலைமை நீடித்தால் சம்பந்தப்பட்ட நீதியரசரின் பெயரை நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்த வேண்டி வரும்.' – என்று லக்ஷ்மன் கிரியெல்ல நீதித்துறையினருக்கு ஒரு மிரட்டல் – சூடு – கொடுத்திருக்கிறார்.

அவரின் கூற்று அல்லது குற்றச்சாட்டுப் பொய்யாக இருக்கலாம். தவறாக இருக்கலாம். ஆனால் வழக்கு விசாரணை முடிந்து நான்கு மாதங்களாகியும் தீர்ப்பு வழங்காத நீதித்துறையின் பொறுப்பற்றதனம் அவரது கூற்றை நியாயப்படுத்தவே செய்கின்றது. உயர் நீதிமன்றம் என்ன செய்யப் போகின்றது என்பதைப் பார்த்திருப்போம்.

## கம்பனிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் இராஜதுரை தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் ஊடகங்களிடம் செந்தில் தொண்டமான் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து பேச்சு நடத்தப்பட்டு வந்த போது சம்பள உயர்வு வழங்க முடியாது என ஆரம்பத்தில் கம்பனிகள் தெரிவித்து வந்தன. கடும் அழுத்தத்துக்குப் பிறகு ஊக்குவிப்பு தொகை மாத்திரம் வழங்கத் தயார் எனத் தெரிவித்தன.

இந்நிலையில், அரச வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதை அடுத்து, வேறு வழியின்றி தற்போது கம்பனிகள் 1,200 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்க முன்வந்துள்ளன.

ஒரு வருட காலமாக ஒரு ரூபா சம்பள உயர்வு கூட வழங்க முடியாது எனத் தெரிவித்த கம்பனி, தற்போது 200 ரூபா அதிகரிப்பு வழங்க முன்வந்தமைக்கான காரணம் அரசால் அரச வர்த்தமானி வெளியிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். ஆதலால் கம்பனிகளுடன் எவ்வித சமரசமும் கிடையாது.

அரசால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலைக் கம்பனிகள் அமுல்படுத்தாவிடின் கம்பனிகளின் முதன்மை இயக்குநர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்." – என்றார்.

## ஊர்திப் பவனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நினைவு ஊர்திப் பவனி ஆரம்பமும் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுத் தூபி முன்றலில் நடைபெறவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வின் நினைவு ஊர்திப் பவனி யாழ். நகரில் தொடர்ந்து பயணிக்கும். நாளை திங்கட்கிழமை தென்மராட்சியிலும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வடமராட்சியிலும், எதிர்வரும் புதன்கிழமை கோப்பாய், மானிப்பாய், நல்லூர் பிரதேசங்களிலும், வியாழக்கிழமை வட்டுக்கோட்டையிலும், வெள்ளிக்கிழமை வேலணையிலும், 18ஆம் திகதி சனிக்கிழமை காரைநகரிலும் பயணிக்கும்.

இறுதி நாள் நினைவேந்தல் சங்கானை பஸ் தரிப்பிடத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி தங்கள் பிரதேசங்களுக்கு வரும்போது மக்கள் அணிதிரண்டு ஆத்மார்த்தமாக அஞ்சலிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

## அறவழிப் போராட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தையொட்டி "முக்கால் நூற்றாண்டு போராட்டமும் எமது தேசத்தின் எதிர்காலமும்" எனும் தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

"2009 மே மாதம் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் படுகொலைகளை இந்த வாரம் நாம் நினைவு கூருகின்றோம். யுத்தத்தின் இறுதிக்கட்டத்திலே எந்தத் திசையிலும் தப்பியோட முடியாமல், தொடர்ச்சியாக அன்பானவர்களை இழந்தவண்ணமாக, வெறுங்கையர்களாக எமது மக்கள், உணவில்லாமல், கஞ்சி மட்டும் குடித்தபடி பாரிய நெருக்கடியிலும், துயரத்திலும் கழித்த நாட்கள் இவை.

துப்பாக்கி, வெடிகுண்டு சத்தங்கள் மௌனித்த பின்பு, தாம் அகப்பட்டிருந்த இடத்திலிருந்து மக்கள் வெளியேறிய போது, பலர் அரச படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டதும், மற்றவர்கள் பல விதங்களில் துன்புறுத்தப்பட்டதும் அனைவரும் அறிந்த உண்மை. குறித்த வயதெல்லைக்குட்பட்ட ஆண்களும் பெண்களும் அரச படைகளிடம் சரணடைய வேண்டுமென வற்புறுத்தப்பட்டு தங்கள் உறவினர்களால் அப்படியாகக் கையளிக்கப்பட்டவர்கள் இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். எஞ்சியவர்கள் முட்கம்பி வேலிகளுக்குள் கைதிகளைப் போல் அடைக்கப்பட்டு, ஒன்றரை வருடத்திற்கு மேல் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். இத்தனை கொடூரங்களும் உலகமே பார்த்திருக்க அரங்கேற்றப்பட்டு 15 வருடங்கள் இன்று நிறைவடைகின்றன. இன்று வரை இந்தச் சர்வதேச குற்றங்களுக்காக ஒருவருக்கெதிராகத்தானும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை, ஒருவரும் குற்றவாளியாகக் காணப்படவும் இல்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 2014 ஆம் ஆண்டு முழுமையானசர்வதேசவிசாரணைஒன்றைநடத்தி, அதன் அறிக்கையை 2015 செப்டெம்பர் மாதத்தில் வெளியிட்டிருக்கின்றது. அந்த அறிக்கையிலும் அதற்கு முன்னர் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்குக் கொடுக்கப்பட்ட 2012 மார்ச் 31 திகதியிட்ட நிபுணர் குழுவின் அறிக்கையிலும் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் பல சர்வதேசக் குற்றங்கள் இழைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன என்றும், அதற்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

2015 ஒக்டோபர் 1 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஸ்ரீலங்கா அரச அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1 என்ற தீர்மானத்தில் சர்வதேச விசாரணையாளர்கள், சட்டத்தரணிகள், வழக்குத் தொடுநர்கள் மற்றும் நீதிபதிகளினுடைய பங்கேற்புடன் நீதிமன்றப் பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதாக உறுதி கூறப்பட்டிருந்த போதிலும், இலங்கை அரசு பின்னர் அந்த வாக்குறுதியிலிருந்து பின்வாங்கி விட்டது.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்த பின்னர் கடந்த 15 ஆண்டு காலத்தில் தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார நிலைப்பாடுகளில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் சம்பந்தமாக சிந்தித்து செயலாற்றுவதற்கான பொருத்தமான தொருதருணம்இதுவென்றுநான்நினைக்கின்றேன்.

எமது அரசியல் விடுதலைக்கென்றே கால் நூற்றாண்டுக்கு கூடுதலாக ஆயுதப் போராட்டமொன்று நிகழ்த்தப்பட்டது. ஆயுத முனையில் அறம் சார்ந்த அரசியல் விடுதலையை பெற முடியாது என்பது எனது தனிப்பட்ட நம்பிக்கையாக இருந்தபோதிலும், தம் மீது மோசமான அடக்கு முறைகளையும் வன்முறையையும் இலங்கை அரசு பிரயோகித்த பின்னணியில்வேறுவழியின்றிதமிழ்இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு அன்று எடுத்த தீர்மானத்தை இன்று வேறொரு சூழ்நிலையிலிருந்து நாம் மதிப்பிடவோ, குறை கூறவோ முடியாது என்பதைத் தொடர்ச்சியாகக் கூறி வந்துள்ளேன்.

அத்தோடு, அத்தகைய ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எவ்வித சுயநல சிந்தனையும் இன்றி எமக்காகச் செய்த அர்ப்பணிப்புகளும் உயிர்த் தியாகங்களும் எக்காலத்திலும் எமது சமூகத்தில் மிக உயர்ந்த பங்களிப்பாகக் கருதப்பட வேண்டும்

07 ▶

## அறவழிப் போராட்ட...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

என்ற நிலைப்பாட்டை நான் தொடர்ச்சியாக வலியுறுத்தி இருக்கின்றேன்.

ஆனால், அத்தகைய தியாகம் மிக்க ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பு, எத்தனையோ பேரிழப்புகளை சந்தித்த பின்பு, மற்றுமொரு முறை ஆயுதம் ஏந்திப் போராடுவதை இலங்கையில் வாழும் எந்தத் தமிழ் மகளும், தமிழ் மகனும் ஒரு தெரிவாக நினைத்துப் பார்ப்பதே இல்லை.

அப்படியான பின்புலத்தில் கடந்த 15 வருட காலத்தில் எங்களுடைய அரசியல், சமூக, பொருளாதார விடுதலைக்காக நாம் மேற்கொண்ட அணுகுமுறைகள் வெற்றியளித்துள்ளனவா என்ற கேள்வியின் அடிப்படையில் சுய விமர்சனத்தை மேற்கொள்வது அத்தியாவசியமானது என்று கருதுகின்றேன்.

ஒரு கணம் எமது அரசியல் உரிமைப் போராட்டத்தை ஒரு புறம் வைத்துவிட்டு இக்காலகட்டத்தில் எமது சமூக மற்றும் பொருளாதார நிலைப்பாடுகளை நோக்குவோமாயின், நாம் பாரிய பின்னடைவுகளைத் தொடர்ச்சியாகச் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம் என்பது புலனாகும். இளையவர்கள் மத்தியிலே பரவலாகி இருக்கின்ற வாள்வெட்டுக் குழுக்கள் போன்ற வன்முறைக் கலாசாரமும், போதைவஸ்து பாவனையும் இதற்கான சான்றாகும். ஆனால், துரதிஷ்டவசமாக, இவை எமது இளைஞர், யுவதிகளை வலுவிழக்கச் செய்வதற்கான முயற்சிகளாகும். ஆட்சியாளர்களே இவற்றை ஊக்குவிக்கின்றார்கள் என்பதில் உண்மை இருக்கும் போதிலும், இவற்றைக் கட்டுப்படுத்தும் முதலாவது பொறுப்பு எமது அரசியல் மற்றும் சமூக தலைவர்களிடம் தான் இருக்கின்றது.

வன்முறைக்கும் போதைப் பாவனைக்கும் சினிமா போன்ற வெளிச் சக்திகள் பெரும் செல்வாக்கைச் செலுத்தினாலும் கூட, அந்தத் தாக்கங்களை மழுங்கடிக்கின்ற விதமான செயற்பாடொன்றையும் முன்னெடுக்காதது எமது தவறேயாகும். இந்தப் பின்னடைவுகள் தொடருமாக இருந்தால், அரசியல் விடுதலை ஒன்று எமக்கு கிடைத்தாலும் கூட அதைப் பொறுப்போடு நிர்வகிக்கின்ற திறன் அற்றவர்களாக எமது இளைய சமுதாயத்தினர் மாறியிருப்பார்கள். எமது இளையவர்கள் கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டுத் துறைகளில் தங்களது அபரிமிதமான திறனை உள்நாட்டிலும் பிராந்தியத்திலும், சர்வதேச மட்டத்திலும் கூட அண்மைய காலங்களில் வெளிப்படுத்தியிருப்பது எமக்கு பெருமை சேர்க்கும் ஒரு முக்கிய விடயம். இது இளைய சமுதாயத்தின் திறமைகளை மேலும் வளர்த்துக்கொள்வதற்கு நாம் மூலதனங்களை செய்ய வேண்டும் என்பதை அழுத்திச் சொல்கின்றன.

இதைப் போலவே பொருளாதார ரீதியில் மிக மோசமாக நலிவடைந்திருக்கும் எமது மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்குப் புலம்பெயர்ந்திருக்கின்ற எமது உறவுகளின் முயற்சிகளின் பயனாகப் பல செயற்றி ட்டங்கள் ஆங்காங்கே செய்யப்பட்டாலும் பாரியளவில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கி எமது இளைஞர், யுவதிகள் வெளிநாடு செல்லாமல் இங்கேயே கண்ணியமாக சுய கௌரவத்தோடு வாழக் கூடிய சூழ்நிலையை நாம் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இளைஞர்கள் வாக்களித்த முறை இதனை அம்பலப்படுத்தியது.

மேற்சொன்ன இரண்டு காரணிகளும் எமது அரசியல் உரிமைகளுக்கு அப்பாற்பட்டவை அல்ல. மாறாக எமது அரசியல் உரிமைகளிலிருந்து பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்தவை. எமது மக்களுக்கான விடுதலை பாதையென்பது இப்படியான முழுமையான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். அப்படியானதொரு அணுகுமுறையை கடந்த 15 ஆண்டுகளாக நாம் பின்பற்ற தவறிவிட்டோம் என்பதே கசப்பான உண்மை.

சென்ற நாடாளுமன்றக் காலம் 2015 – 2019 மட்டும் இதற்கு சற்று விதிவிலக்கானது. அந்தக் காலகட்டத்தில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பாரிய அளவிலான நிலங்கள் விடுவிக்கப்பட்டதும், பல தசாப்தங்களாக புறக்கணிக்கப்பட்டிருந்த எமது பிரதேசங்களில் அபிவிருத்திக்கும் பொருளாதார மீளெழுச்சிக்குமென முக்கியமான நிதியொதுக்கீடுகள் செய்யப்பட்டதை நாம் மறந்துவிடலாகாது. ஆனால், அதற்குப் பின்னர் நில ஆக்கிரமிப்புக்கள் தொடர்ந்து மிக வேகமாக நடைபெறுவதையும் பல்வேறு அடக்குமுறைகள் எம்மீது பிரயோகிக்கப்படுவதையும் நாம் நன்கு அறிவோம். இவற்றைத் தடுப்பதென்பது, நாம் ஒரு தேசமாக இத்தீவிலே தொடர்ந்து வாழக்கூடிய எமது இருப்பை தக்கவைக்கின்ற, “தமிழ்த் தேசியத்தை” பாதுகாக்கின்ற பிரதானமான செயற்பாடாகும். வெற்றுக் கோஷங்களையும், போராட்ட மனநிலையைத் தூண்டுகின்ற பேச்சுக்களையும் நடைமுறை சாத்தியமற்ற தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் மட்டும் எமது மக்களுக்கான விடுதலைப் பயணத்தை ஒரு அங்குலம் கூட முன்னோக்கி நகர்த்த முடியாது. நாம் ஒரு தனி தேசமென்பதை உரக்கச் சொல்லுகிற அதேவேளையில் ஒரு தேசமாக வாழ்வதற்கு வேண்டிய அணுகுமுறைகளை நாம் கைவிடக் கூடாது.

தந்தை செல்வாவின் அடிச்சுவட்டில் பயணிக்கும் நாங்கள் வன்முறையையோ அதன் வெவ்வேறு பிரதிபலிப்புக்களையோ முற்றாகத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். எமது இளைஞர், யுவதிகளினதும், போரிலே மடிந்தவர்களினதும் உயிர்த் தியாகங்கள் வீணாகப் போகாதிருக்க வேண்டுமேயானால் வன்முறைக்குத் தூண்டாத எமது அணுகுமுறை தொடர்பாக எமது சிந்தனையிலும் பேச்சிலும் தெளிவு இருத்தல் வேண்டும்.

1957 ஆம் ஆண்டு வன்முறையில் ஈடுபடத் தொடங்கியிருந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியினருக்கு தந்தை செல்வா கூறிய எச்சரிக்கை: “தமிழ் மக்களுக்கு நல்லது கொண்டுவரப் புறப்பட்ட நாங்கள், நாசம் கொண்டுவந்த கதையாக மாறிவிடும்” என்பது இன்றைய சூழ்நிலைக்கும் சாலப் பொருந்தும்.

எமது அரசியல் நிலைப்பாட்டில் உறுதியாக நிலைத்திருந்து எமது தன்மானத்துக்கும் சுய கௌரவத்துக்கும் ஏற்ற விதமான ஆட்சி மாற்றத்துக்குச் சாத்வீக வழியில் போராடுகின்ற அதே வேளையில், தேர்தல் நேரங்களிலும் மற்ற தருணங்களிலும் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை உன்னிப்பான இராஜதந்திர நோக்கோடு நாம் கையாள வேண்டும்.

ஒருஜனநாயகஅமைப்பிலே,எண்ணிக்கையிலே குறைவானவர்களாக இருக்கின்ற ஒரு தேசம் கைக்கொள்ள வேண்டிய அத்தியாவசிய அணுகுமுறை அது. நாம் வலியுறுத்துகின்ற தமிழ்த் தேசியப் பிரச்சினை, இலங்கையின் பிரதானமான தேசிய பிரச்சினை என்பதை இலங்கையில் வாழும் மற்றைய சமூகத்தினருக்கும் நாம் பொருத்தமான முறைகளில் விளங்கப்படுத்த வேண்டும். எம்மை ஒரு தேசமாக அங்கீகரிப்பது தமக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்கின்ற உண்மையை அவர்களும் உணரச் செய்தல் வேண்டும்.

எமது போராட்டம் நீதிக்கான போராட்டம் நியாயமான அரசியல் உரிமைகளுக்கான போராட்டம். அநீதி, அநியாயம் ஒருபோதும் வென்றதில்லை, எமது போராட்டம் நீண்ட நெடியதானதாக இருந்தாலும், அறவழியில் சாத்வீக முறைகளைக் கைக்கொண்டு அதிலிருந்து அணுவளவும் பிசகாமல் போராடுவோமானால் எமக்கான நீதி கிடைத்தேயாகவேண்டும். அப்படியானதொரு தூய்மையான அறவழிப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு அனைவருக்கும் அறைகூவல் விடுக்கின்றேன். எதிர்காலத்தை நோக்கி நம்பிக்கையோடு சேர்ந்து பயணிப்போம்! ” – என்றுள்ளது.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முள்ளிவாய்க்கால்நினைவேந்தல்பொதுக் கட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழினப் படுகொலையின் 15 ஆவது ஆண்டின் நினைவேந்தல் நிகழ்வுக்காக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைந்துள்ள பகுதியில் சிரமதானப் பணியும் நினைவேந்தல் நிகழ்வுக்கான அழைப்பும் விடுக்கும் ஊடகச் சந்திப்பும் நேற்று மாலை நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவர்களில் ஒருவரான தென்கயிலை ஆதீனத்தைச் சேர்ந்த தவத்திரு அகத்தியர் அடிகளார் 15 ஆவது இனப்படுகொலை நினைவேந்தலுக்கான அழைப்பை ஊடகங்கள் வாயிலாக விடுத்தார் .

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

“முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழினப் படுகொலை உச்சந்தொட்ட இவ் வருடம் 15ஆவது ஆண்டு. ஈழத்தமிழினத்தின் அடக்குமுறைக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் போராட்டப் பரிமாணத்தை பல்வேறு சக்திகளின் துணை கொண்டு இலங்கை அரசு மௌனிக்கச் செய்து 15 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

தமிழ்த் தேசியத்தின் நம்பிக்கையில் உறுதி கொண்டு தமிழர் விடுதலைப் போராட்டத்தின் வடிவங்களை மாற்றி தொடர்ந்தும் விடுதலைக்காக ஈழத்தமிழினம் பயணிக்கின்றது என்பது விடுதலையின் மீது கொண்ட பேரவாவின் பிரதிபலிப்பு.

ஈழத்தமிழினத்தின் நீதி வேண்டிய பயணமும், தொடர் போராட்ட முன்னெடுப்புகளும் நீதியின் கதவை எப்போதுமே தட்டிக்கொண்டேயிருக்கப் போகின்றது. மனித உரிமைக்காவலர்கள் என்று மார் தட்டிக்கொள்பவர்களின் வெள்ளைச் சாயம் தமிழினப் படுகொலையில் வெளுக்கத்தொடங்கி தற்போது காசாவில் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கும் பலஸ்தீனப்படுகொலையில் கட்டங்கட்டமாக அப்பட்டமாகத் தோலுரிக்கப்படுகின்றது.

மனித உரிமை சாசனத்தை ஒரு கையிலும், கொலைக்கருவியை இன்னொரு கையிலும் கொண்டு

08

# மட்டு நகருக்குக் காரில் கடத்தப்பட்ட 1,440 போதை மாத்திரைகள் சிக்கின!





(கனகராசா சரவணன்)

ஓட்டுமாவடியில் இருந்து மட்டக்களப்புக்குக் கார் ஒன்றில் சட்டவிரோதமாக போதை மாத்திரைகளைக் கடத்திச் சென்ற ஒருவரை மட்டு. ரயில்வே வீதியில் வைத்து நேற்று சனிக்கிழமை மாலை விசேட அதிரடிப்படையினர் கைது செய்ததனர். அவரிடமிருந்து 1,440 மாத்திரைகளையம் கடத்தலுக்கு பயன்படுத்திய கார் ஒன்றையும் மீட்டுத் தங்களிடம் ஒப்படைத்துள்ளனர் என மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு கடற்படைப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து விசேட அதிரடிப்படைத் தளபதி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனைக்கமைய மட்டு அம்பாறை வலய பொலிஸ் அத்தியட்சகர் குணசிறி மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சம்பத்குமார ஆகியோரின் வழிகாட்டலில் கல்லடி அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கா தலைமையில விசேட அதிரடிப்படையை கொண்ட குழுவினர் மற்றும் கடற்படை புலனாய்வு பிரிவினர் இணைந்து நேற்று மாலை 6.00 மணியளவில் மட்டக்களப்பு ரயில்வே குறுக்கு வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மாத்திரைகளை கடத்திவந்த கார் நிறுத்தி சோதனையிட்டது. அதில் இருந்து 1,440 போதை மாத்திரைகு மீட்டகப்பட்டன. ஒருவர் கைது செய்யப்பட்டார்.

# மட்டக்களப்பு இருதயபுரத்தில் 58 துப்பாக்கி ரவைகள் மீட்பு!



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள இருதயபுரம் பகுதியில் வீதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் 58 துப்பாக்கி ரவைகள் நேற்று சனிக்கிழமை இரவு மீட்டுள்ளன என மட்டக்களப்புத் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றிக்கமைய நேற்று இரவு 7 மணியளவில் இருதயபுரம் சமுர்த்தி வங்கி கட்டடத்துக்கு அருகாமையில் வீதி ஓரத்தில் சொப்பிங் பையொன்றில் கட்டப்பட்ட நிலையில் கைவிடப்பட்டிருந்த 58 ரி.56 ரக துப்பாக்கி ரவைகள் மீடகப்பட்டன எனப் பொலிஸெ தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பெரும் குற்றப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## முள்ளிவாய்க்கால்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனநாயகம் போதிப்பவர்களின் அபத்தம் வெளிக்கிளம்புகின்றது. ஈழத்தமிழினம் நினைவுகளை மட்டும் ஆயுதமாக்கவில்லை. விடுதலைக்கனவை நம்பிக்கை இயங்கியலாக்கி இலக்கு நோக்கிப் பயணிக்கின்றது. நீதிக்கான தொடர் தேடலும் ஓர் ஆயுதமே என்பதை ஆர்மேனியா தொடக்கம் பலஸ்தீனம் வரைக்கும் விடுதலைப் போராட்டங்களின் வரலாறு எமக்குச் சொல்லித்தருகின்றது.

பேரவலத்தை நினைவு கூருவதற்கு அப்பால், ஈழத்தமிழினம் விடுதலைக்காகத் தியாகித்தவர்களின் கனவுகளின் நினைவுகளைச் சுமந்து பயணிக்கின்றது. முள்ளிவாய்க்கால் ஒரு பேரவலத்தின் குறியீடு மட்டுமல்ல, அடக்குமுறை எதிர்ப்பின் நம்பிக்கையின் குறியீடு.

விடுதலைப் போராட்டத்தை வெற்றிஃதோல்வி என இருமைக்குள் வரையறுத்துவிட முடியாது. 15ஆவது ஆண்டின் நினைவேந்தல் ஒழுங்குமுறைகளைத் தயார் செய்யும் ஈழத்தமிழினம், முள்ளிவாய்க்கால் தரும் விடுதலை நம்பிக்கையின் நினைவுகளை மக்கள் மயப்படுத்தப்பட வேண்டிய கால கட்டத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. விடுதலை நம்பிக்கையின் நினைவுகளை மக்கள் மயப்படுத்துவதென்பது, ஒரு அமைப்பின் நிகழ்ச்சித் திட்டமல்ல.

ஒவ்வொரு ஈழத்தமிழனதும் வரலாற்றுக் கடமையும் உரிமையும் கூட. இதை நினைவில் கொண்டு, இன்றுவரை நீதி வழங்கப்படாத இனப்படுகொலையின் இவ்வருடத்துக்கான நினைவேந்தல் எதிர்வரும் 18ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடைபெறும். எனவே, அனைவரும் பேதங்களைத் துறந்து, சுயலாப, சுய விளம்பரப்படுத்தல்களைக் கடந்து எமது பொது நிகழ்ச்சி நிரலில் ஒன்றுபட்டு தமிழர்களாக இந்த நினைவேந்தலில் ஒன்றிணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் அன்று மாலை 6 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் கோயில்களிலும் மணி ஒலி எழுப்புவதுடன் அன்று இயலுமான வரை முள்ளிவாய்க்கால் கஞ்சியையும் பரிமாறி தமிழின அழிப்பை நினைவு கூருவோம்." - என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சகுனி ரணில்!

இது தேர்தல் ஆண்டு என்று கடந்த வருடமே அறிவிக்கப்பட்டு இருந்தாலும் கூட, தேர்தல்கள் குறிப்பிட்ட காலத்தில் நடக்குமா என்பது தொடர்பான சந்தேகம் இன்னும் நீடிக்கவே செய்கின்றது.

அரசமைப்பு ஏற்பாடுகளின்படி, இன்னும் நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டேயாக வேண்டும். அது திட்டமிட்டபடி உரிய காலத்தில் நடக்குமா என்பது பற்றிய சந்தேகம் இன்னும் நாட்டில் வலுவாக நீடிக்கவே செய்கின்றது.

தேர்தல்கள் ஆணையத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு, வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டு, வாக்குச்சீட்டுகளும் பகுதி அளவில் அச்சான நிலையில், உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒரு வருடத்திற்கு மேலாக நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுவது போல, ஜனாதிபதித் தேர்தலும் கடைசி நேரக் காய் நகர்த்தல்கள் மூலம் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுமா என்ற கேள்வி இப்போது பல வட்டாரங்களிலும் எழுப்பப்படுகின்றது.

அதற்குக் காரணங்கள் உண்டு. இரண்டு தேர்தல்களையும் ஒட்டிக் கட்டவிழும் சில விடயங்கள் நன்கு ஒத்துப் போகின்றன. அதனால் அந்தத் தேர்தலுக்கு (உள்ளூராட்சி தேர்தலுக்கு) நடந்த கதிதான் இந்தத் தேர்தலுக்கும் (ஜனாதிபதித் தேர்தலுக்கும்) நடக்கும் என்று சந்தேகிக்க நியாயங்கள் இருக்கவே செய்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிக்க வேண்டிய உத்தியோகபூர்வ காலத்துக்கு சுமார் மூன்று மாதங்கள் முற்கூட்டியே பொது அறிவித்தல் ஒன்றின் மூலம் அதை வெளிப்படுத்தி இருக்கின்றது தேர்தல் ஆணையம். இது வழமைக்கு மாறான நடவடிக்கை.

இப்படித்தான் உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்னரும் உத்தியோகப்பற்றற்ற அறிவிப்பை விடுத்தார்கள் என்று இப்போது சுட்டிக் காட்டுகின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்படும் முன்னரே கட்சிகள், அரசியல் தலைவர்கள் எல்லாம்ஆரவாரமாகஅந்தஏற்பாடுகள்-முஸ்தீபுகளில் - தீவிரமாகவும் முனைப்பாகவும் ஈடுபட்டனர். ஆனால் அவை எவற்றிலும் சம்பந்தப்படாமல் - தேர்தல் விவகாரங்கள் பற்றியே அலட்டிக் கொள்ளாமல் - அப்போது விட்டேத்தியாக இருந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. நிதி அமைச்சர் என்ற முறையில் அந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீட்டை அனுமதிக்காமல் வெட்டி தேர்தலை நடத்த விடாமல் இடையிலே அவர் தடுத்த போதுதான், அவரின் அந்தத் தேர்தல் விடயங்களை ஒட்டிய மௌனத்தின் அர்த்தம் புரிந்தது.

இப்போதும் ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் நான்கு மாதங்கள் இருக்கின்றன. தாம் அந்தத் தேர்தலில் போட்டியிடுவாரா, எந்த அணியில், யாருடன் கூட்டு சேர்ந்து களமிறங்குவார் என்பவை தொடர்பில் அறிவிப்பு எதையும் பகிரங்கமாக வெளிப்படுத்தாமல் - பொது வெளியில் இவ்விடயத்தை ஒட்டி அதீத மௌனம் - அமானுஷ்ய அமைதி - காக்கின்றார் அவர். அதுதான் சந்தேகத்தைக் கிளப்புகிறது.

ஒன்றில் - இந்தத் தேர்தலை நடத்தாமல் தள்ளிப்போடும் உபாயத்தை அல்லது திட்டத்தை வகுத்து வைத்துக் கொண்டு, இப்படி விட்டேத்தியாக அவர் நடக்கக்கூடும். அல்லது யாரும் பங்குபற்றட்டும், இத்தேர்தலில் தான் போட்டியிடுவதில்லை என்று அவர் ஏற்கனவே தீர்மானித்திருக்கலாம் என்று சில வட்டாரங்கள் ஊகிக்கின்றன.

ஆனால், நரித் தந்திரசாலியான ரணிலுக்கு, வழமையாகவே தேர்தல்களைக் கண்டு அஞ்சி ஓடி ஒளிபவர், தொடைநடுங்கி என்றெல்லாம் விமர்சனப் பெயர் உண்டு. அத்தோடு அரசியலில் எத்தகைய சகுனித்தனத்தையும் முன்னெடுக்கக் கூடிய சாணக்கியர் என்ற கணக்கும் அவரைப் பற்றி உள்ளது.

திட்டமிட்டபடி ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படும் என்று அவர் அவ்வப்போது குறிப்பிட்டாலும், தேர்தலையொட்டிய தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தாமல், தமது சீட்டுக்களைநெஞ்சுக்குநெருக்கமாகவைத்து, பிறருக்கு காட்டாமல், பிடி கொடுக்காமல், அரசியல் சீட்டாட்டத்தை அவர் ஆடிக்கொண்டிருக்கின்றமைதான்பலருக்கும் பலத்த சந்தேகத்தையும் தருவதாக இருக்கின்றது.

எந்தக் கட்டத்தில், தமது துரும்புச்சீட்டைத் தூக்கி அடித்து, ஜனாதிபதி தேர்தலுக்கும் எந்த விதத்திலாவது ஆப்பு வைத்து விடுவாரோ என்ற பயம் - பீதி - அரசியல் அச்சம் - பதற்றம் - அரசியல் வட்டாரங்களில் இல்லாமல் இல்லை.

# ஊழலை எதிர்த்துப் போராட மோடி என்னிடம் இருந்து கற்க வேண்டும்

## டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவிப்பு



ஊழலை எதிர்த்துப் போராட பிரதமர் நரேந்திர மோடி விரும்பினால், தன்னிடம் இருந்து அவர் கற்றுக்கொள்ள வேண்டும் என்று டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

மதுபான கொள்கை ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் பிணை வழங்கியது. இதையடுத்து, நேற்று டில்லியில் உள்ள அனுமன் கோயிலில் வழிபாடு மேற்கொண்ட அரவிந்த்கேஜ்ரிவால், பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திகார் சிறையில் இருந்து 50 நாள்கள் கழித்து தற்போது வெளியே வந்திருக்கிறேன். தேர்தலுக்கு இடையில் சிறையிலிருந்து வெளியே வருவேன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இது பகவான் அனுமனின் ஆசிர்வாதம்.

ஆம் ஆத்மி ஒரு சிறிய கட்சி. நாங்கள் இரண்டு மாநிலங்களில் ஆட்சியில் இருக்கிறோம். ஆனால், எங்கள் கட்சியை ஒழித்துவிட பிரதமர் உறுதியாக இருக்கிறார். அரவிந்த் கேஜ்ரிவால், மணீஷ் சிசோடியா, சஞ்சய் சிங், சத்யேந்திர ஜெயின் எனும் நான்கு முக்கியத் தலைவர்களை அவர்கள் சிறைக்கு அனுப்பினார்கள். இதன்மூலம், ஆம் ஆத்மி கட்சியை ஒழித்து விடலாம் என அவர்கள் நினைத்தார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் நாங்கள் ஒரு கட்சி மட்டுமல்ல, ஒரு சிந்தனை.

ஊழலுக்கு எதிராக நான் போராடுகிறேன் என்று பிரதமர் கூறுகிறார். ஆனால் ஊழல்வாதிகள் அனைவரும் பா.ஜ.கவில் இணைகிறார்கள், அவர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஊழலை எதிர்த்துப் போராட விரும்பினால், பிரதமர் மோடி என்னிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும். எல்லா திருடர்களும் பொய்யர்களும் பா.ஜ.கவில் சேர்ந்து விட்டார்கள், அவர்களின் வழக்குகளும் மறைந்துவிட்டன. எதிர்க்கட்சிகளுக்கு ஒரு செய்தியை சொல்வதற்காகவே அவர்கள் என்னை கைது செய்தனர். கேஜ்ரிவாலைக் கைது செய்ய முடியும்போது, யாரையும் கைது செய்ய முடியும் என்பதே அந்த செய்தி.

பா.ஜ.க. மிகவும் ஆபத்தான ஒன்றை செய்கிறது. அவர்களின் நோக்கம் "ஒரே நாடு, ஒரே தலைவர்". தேர்தலில் வெற்றி பெற்றால் எதிர்க்கட்சி தலைவர்கள் அனைவரையும் அவர்கள் சிறைக்குள் தள்ளுவார்கள். ஒரே தேசம், ஒரே தலைவர் என்பதில் கவனம் செலுத்துவதால்தான், தங்கள் கட்சிக்குள் இருந்தும் வசுந்தரா ராஜே, மனோகர் லால் கட்டார் உள்ளிட்ட பல தலைவர்களை அழித்துவிட்டனர். அவர்கள் அடுத்ததாக யோகி ஆதித்யநாத்தின் பின்னால் செல்வார்கள்.

22 நாள்கள் அவகாசம் வழங்கியதற்காக உச்ச நீதிமன்றத்துக்கு நன்றி. இந்த நாட்களில் நாடு முழுவதும் சென்று நாட்டுக்காக போராடுவேன். நமது தேசத்தை சர்வாதிகாரத்தின் பிடியில் இருந்து காப்பாற்றுங்கள் என்று 140 கோடி மக்களிடமும் மன்றாட வந்துள்ளேன். தயவுசெய்து என் தேசத்தை காப்பாற்றுங்கள். என் இதயம், ஆன்மா மற்றும் என்னிடம் உள்ள அனைத்தையும் இந்த நாட்டுக்காக அர்ப்பணிப்பேன்.

தேர்தல் முடிவுகள் எவ்வாறு இருக்கும் என்பது தொடர்பாக நான் என்ன நினைக்கிறேன் என்பதைத் தாண்டி, பல்வேறு நிபுணர்களிடம் பேசினேன். ஜூன் 4 ஆம் திகதி அவர்கள் (பா.ஜ.க) ஆட்சி அமைப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. அவர்களுக்கு 200-220 இடங்கள் கிடைக்கும். அதற்கு மேல் கிடைக்காது. மத்தியில் இண்டியா கூட்டணி ஆட்சி அமைக்கும். அந்த ஆட்சியில் ஆம் ஆத்மி கட்சி இருக்கும். டெல்லி மாநில அந்தஸ்தை பெற ஆம் ஆத்மி கட்சி போராடும்"- என்றார்.

# 6 நாள்களில் 4 பட்டாசு ஆலைகளில் வெடி விபத்து; தொழிலாளர்கள் அச்சம்



சிவகாசி அருகே நாரணாபுரம் புதூரில் உள்ள மகேஸ்வரி பட்டாசு ஆலையில் நேற்று ஏற்பட்ட வெடி விபத்தில் 4 அறைகள் இடிந்து தரைமட்டமாயின.

இந்த நிலையில், கடந்த 6 நாள்களுக்குள் இடம்பெற்ற 4 ஆவது விபத்து இது என்பதால் பட்டாசு தொழிலாளர்கள் அச்சத்தில் உள்ளனர்.

தமிழகத்தில் 20 இற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் பட்டாசு தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. அதில் தமிழகத்திலேயே பட்டாசு தொழிற்சாலை அதிகமுள்ள விருதுநகர் மாவட்டம் மற்றும் ஏனைய பகுதிகளில் பட்டாசு தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளில் அடிக்கடி விபத்துகள் இடம்பெறுகின்றன. இதனால், உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன.

# ரஷ்யா பாலத்தில் பயணித்துக்கொண்டிருந்த பஸ் ஆற்றுக்குள் வீழ்ந்து விபத்து; 7 பேர் பலி




ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் பயணிகளை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று பாலத்தில் இருந்து கவிழ்ந்து ஆற்றில் வீழ்ந்து விபத்திற்குள்ளானது. இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் மொய்க்கா ஆற்றின் மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தில் பயணித்துக் கொண்டிருந்த பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடி பாலத்தில் இருந்து ஆற்றுக்குள் வீழ்ந்தது.

இதன்போது பஸ்ஸில் 20 பேர் இருந்துள்ளனர். இதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். சிலர் காயங்களுடன் மீட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பஸ் சாரதி கைது செய்யப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விபத்திற்குள்ளான பஸ் ஆற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆப்கானிஸ்தானில் கடும் மழை: 200 பேர் உயிரிழப்பு,வீடுகள் சேதம்



ஆப்கானிஸ்தானில் பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களில் 200 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் பாக்லான் மாகாணம் கடுமையான வெள்ள பாதிப்பிற்கு முகங்கொடுத்துள்ளது.

அங்கு 200 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகள் முற்றிலுமாகவோ, பகுதியளவிலோ சேதமடைந்துள்ளன.

பாக்லான் மாகாணத்தின் டீயபாடயளெ துயனனை மாவட்டத்தில் மாத்திரம் 1500 வீடுகள் சேதமடைந்துள்ளன. அங்கு நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த தரவுகளை ஆப்கானிஸ்தானின் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

எனினும், தலிபான் அரசின் தரவுகளின் படி, நேற்று முன்தினம் இரவு மாத்திரம் 62 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டின் மாகாணங்கள் பலவும் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கு வுயமாயச மாகாணத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களையும் காயமடைந்தவர்களையும் மீட்புக் குழுவினர் மீட்டு வருகின்றனர்.

வெள்ளத்தில் சிக்கியவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் பாக்லான் மாகாண அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.





# புத்தரின் போதனைக்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் உள்ள தொடர்பு பற்றிய ஆராய்ச்சிக்கு ரூ. 100 கோடி!

## அடுத்த ஆண்டு ஒதுக்கப்படும் என அறிவிப்பு
## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“புத்தரின் போதனைகளுக்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையிலான தொடர்பு குறித்த ஆராய்ச்சிப் பணிகளுக்கு அடுத்த வருடம் ஒரு பில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மொரட்டுவ பௌத்த மன்ற மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மொரட்டுவ இலங்கை பௌத்த சங்கத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில் –

“இன்று முழு உலகமும் காலநிலை மாற்றத்தால் பெரும் அச்சுறுத்தலைச் சந்தித்து வருகிறது. இந்நாள்களில் நாம் எதிர்கொள்ளும் கடுமையான சூரிய வெப்பம் நாம் இதுவரை சந்திக்காத ஒரு சூழ்நிலை. இந்தக் காலநிலை வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த இலக்கு நிர்ணயித்து செயல்பட வேண்டிய கடினமான சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது. இத்துடன், கடும் நீர் பிரச்சினையையும் சந்திக்க வேண்டியுள்ளது. பௌத்த தர்மத்தின்படி இந்த சிக்கலை எவ்வாறு எதிர்கொள்வது என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களில் உலகின் முக்கிய பிரச்சினையாக காலநிலை மாற்றப் பிரச்சினை மாறும். புத்தரின் போதனைகளின்படி பார்த்தால் நாகரீகத்தின் பேராசையின் காரணமாகவே நாம் இந்த நிலையை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. அனைவரும் வேகமாக முன்னேற விரும்பினர். வாகனங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால், சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. அதன்படி மனித சமுதாயம் சுற்றுச்சூழலுக்கு பெரும் கேடு விளைவித்துள்ளது. எனவே, காலநிலை மாற்றத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதில் நாம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் உலகம் இன்று விரைவான தொழில்நுட்ப வளர்ச்சியை நோக்கி நகர்கிறது. குறிப்பாக 1945 இல் அணுகுண்டு வெடித்தபோது, இனி தொழில்நுட்ப முன்னேற்றம் இருக்காது என்று கருதப்பட்டது. ஆனால் தற்போது அனைத்துத் துறைகளிலும் தொழில்நுட்பத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் பாடசாலையில் படிக்கும் போது கணனி, கையடக்கத்தொலைபேசி எதுவும் இருக்கவில்லை. ஆனால் தற்போது, நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால், இன்று செயற்கை நுண்ணறிவு வரை சென்றுள்ளோம்.

இப்போது இருப்பது செயற்கை நுண்ணறிவின் ஆரம்பமாகும். அடுத்த இரண்டு தசாப்தங்களில் செயற்கை நுண்ணறிவு எங்கே செல்லும் என்ற கேள்வியை நாம் எதிர்கொள்கிறோம். செயற்கை நுண்ணறிவுக்கும் புத்த மதத்துக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

நம் மனதால் அனைத்தும் கட்டுப்படுத்தப்படுகின்றன என்பதையே புத்தரின் போதனைகள் சுட்டிக்காட்டுகின்றன. மனதைக் கட்டுப்படுத்தினால் முன்னேறலாம். மனதைக் கட்டுப்படுத்தாவிட்டால் நமக்கு எதிர்காலம் இல்லை. மனதைக் கட்டுப்படுத்துவது மனிதனுக்கு மட்டுமே உள்ளது. அதனால் தான் புத்தரின் போதனைகள் மனித குலத்திற்காகச் செய்யப்பட்டது. மனதைக் கட்டுப்படுத்தினால் பேராசையை ஒழிக்க முடியும். இந்த மனித மனதிற்கு இணையாக செயற்கை நுண்ணறிவு தற்போது வந்துவிட்டது. செயற்கை நுண்ணறிவுக்கு பல்வேறு தகவல்களை இணைக்க முடியும். செயற்கை நுண்ணறிவு அதற்கேற்ப செயல்படுகிறது. அப்படியானால், புத்தரின் போதனைகளுக்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையிலான தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு வேறு மதத்தைப் போதிக்குமானால் அது பௌத்தத்திற்கு அச்சுறுத்தலாக அமையும். எனவே, நாம் அது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். வரலாற்று சிறப்புமிக்க அனுராதபுர காலத்தில் பௌத்தம் இலங்கைக்கு வந்ததுடன், அதன் பின்னர் பௌத்தம் பல்வேறு அழுத்தங்களைச் சந்தித்தது. இந்து மதம், மஹாயான தர்மம் மற்றும் அரசியல் சூழ்நிலைகள் அதில் தாக்கம் செலுத்தியுள்ளன. இக்காலத்தில் செயற்கை நுண்ணறிவும் அதில் இணைகிறது.

அப்படியானால் செயற்கை நுண்ணறிவு வேறு ஒரு தர்மத்தைப் போதிக்குமா என்று சிந்திக்க வேண்டும். மக்கள் தங்கள் கையில் இருக்கும் கைபேசியுடன் தர்மத்தை இணைத்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை சிந்திக்க வேண்டும். இது பௌத்தம் மட்டுமன்றி ஏனைய மதத்தினரும் எதிர்கொள்ளும் பிரச்சினையாக மாறியுள்ளது.

எனவே, செயற்கை நுண்ணறிவை கட்டுப்படுத்தவும் புதிய சட்டவிதிகளை நாம் கொண்டு வருகிறோம். தொழில்நுட்ப மேம்பாட்டு சட்ட வரைவை தொழில்நுட்ப அமைச்சு தயாரித்துள்ளதுடன், அதன் கீழ் செயற்கை நுண்ணறிவு மையம் ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே செயற்கை நுண்ணறிவை நிர்வகிக்கும் சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன. நாமும் அதையே செய்ய வேண்டும்.

மேலும், புத்தரின் போதனைக்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையிலான தொடர்பு குறித்த ஆராய்ச்சியைத் தொடங்க அடுத்த ஆண்டு ஒரு பில்லியன் ரூபாய் ஒதுக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதை இந்த ஆண்டு நிறைவேற்ற எதிர்பார்க்கப்பட்டாலும், செயற்கை நுண்ணறிவைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் இன்னும் நிறைவேற்றப் படாததால், அடுத்த ஆண்டுக்கு அது ஒத்திவைக்கப்பட்டது. அதற்கேற்ப புதிய சட்டங்களை முன்வைத்து அந்த செயற்பாடுகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றோம்.” – என்றார்.







# ரஷ்யா – உக்ரைன் யுத்தத்துக்காக இலங்கையிலிருந்து ஆள்கடத்தல்

## இதுவரையில் ஏழு பேர் கைது



ரஷ்ய – உக்ரைன் போருக்காக சட்டவிரோதமான முறையில் இலங்கையிலிருந்து ஆள்கடத்தலில் ஈடுபட்ட மற்றுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கமைவாக, இவ்வாறான சம்பவம் தொடர்பில் இதுவரை 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் மற்றும் சார்ஜன்ட் ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

ரஷ்ய – உக்ரைன் யுத்தத்தில் இணைந்த இலங்கையர்கள் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ரஷ்ய – உக்ரைன் மோதலில் 64 இலங்கையர்கள் பங்குபற்றியுள்ளமை இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாக சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆள்கடத்தல் தொடர்பான தகவல்களை பாதுகாப்பு அமைச்சின் 0112 441146 எனும் இலக்கத்திற்கு தெரிவிக்க முடியும்.

# பதுளை – மஹியங்கனை வீதியில் விபத்தில் வயோதிப தம்பதியர் பலி



பதுளை – மஹியங்கனை வீதியின் புவக்கடமுல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் தம்பதியர் உயிரிழந்துள்ளனர்.

முச்சக்கரவண்டியொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் குடைசாய்ந்து பஸ்ஸூடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

பதுளை – மெதபத்தன பகுதியை சேர்ந்த 79 வயதான கணவனும் 76 வயதான மனைவியுமே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, தம்புள்ளை ஹபரண வீதியின் திகம்பத்தஹ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 09 பேர் காயமடைந்துள்ளனர்.

லொறியுடன் கப் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். 44 வயதான பெண் ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

# பரீட்சை எழுதி விட்டு வீடு திரும்பிய மாணவி விபத்தில் சிக்கி படுகாயம்

பலாங்கொடை வெலிகேபொல பிரதான வீதியில் பயணித்த தனியார் பஸ் மீது அதே வீதியில் இரும்புக் கம்பிகளை ஏற்றி பயணித்த லொறி ஒன்றிலிருந்து இரும்புக் கம்பிகள் கண்ணாடியை உடைத்துக்கொண்டு உட்புகுந்ததில் மாணவி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்தவர் இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவியாவார்.

மாணவி பரீட்சை எழுதிவிட்டு வீடு செல்லும்போதே விபத்தில் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி மாணவி கழுத்து மற்றும் முகப் பகுதிகளில் கம்பி குத்தி காயமடைந்ததையடுத்து பலாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக இரத்தினபுரி போதனா வைத்திசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.




# ரணிலை வெல்ல வைப்போம் பிள்ளயான் தரப்பு தீர்மானம்!

(கனகராசா சரவணன் )

இந்த நாட்டில் உறுதியான – எதிர் பார்ப்பு இல்லாத – திட்டத்தோடு இருக் கின்ற தலைவர்களை தற்போது காண முடியாது இருக்கின்றது. எனவே அந்த அடிப்படையில் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க போட்டியிட்டால் அவரை வெல்ல வைப்பதற்கான ஆலோசனைகளை செய்து கொண்டிருக்கின்றோம் என இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலை வருமான பிள்ளையான் என்றழைக்கப் படும் சி.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற – மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன திட்டம் தொடர்பான – முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மற்றும் ஜனாதிப தியின் உறுமய தொடர்பான திட்டம தொடர்பான கூட்டத்தில் பங்கேற்றிய இராஜாங்க அமைச்சா கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித் தார்.

மாவட்டத்தில் உறுமய திட்டத்தின் ஊடாக காணி பகிர்ந்தளிப்புத் தொடர் பாகஅரசாங்கஅதிகாரிகளுக்கிடையிலே அதன் சவால்கள் தொடர்பாகக் கலந்து ரையாடினோம். நாட்டில் 20 இலட்சம் காணித் துண்டுகளை விரைவாக வழங்க வேண்டும் என்ற வேலைத் திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார்.

அதற்கு உதவி செய்யும் முகமாக மட்டு. மாவட்டத்தில் 27 ஆயிரம் ஏக்கர் காணி பகிர்ந்தளிக்க வேண்டியிருக் கின்றது. அதனை விரைவுபடுத்துவ தற்கான வேலைத்திட்டங்களை முன் னெடுத்துள்ளோம். அந்த வகையில் 514 பேருக்கான காணி பகிர்ந்தளிப்பு இடம்பெற்றுள்ளது.

எனவே இதில் உள்ள குறைபாடு களை விரைவாக நிவர்தி செய்து கொண்டு, அனைவருக்கும் உறுமய வேலைத்திட்டதின் ஊடாக விரைவாக காணி கையளிப்பு இடம்பெற ஏற்பாடு செய்துள்ளோம். அதில் நிர்வாக ரீதியாக மக்கள் காணி உறுதி பத்திரம் வழங்க அச்சப்படுவதாக அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

இந்த மாவட்டம் விவசாய மாவட்டம். உறுமய திட்டத்தில் இந்த உற்பத்திகளை அதிகரிக்கும் வேலைத்திட்டத்தில் உலக வங்கி ஊடாக பணிகள் இடம் பெற்று வருகின்றன. இது கடந்தகால பொருளா தாரப் பிரச்சனை காரணமாக பின்ன டைந்துள்ளது. தற்போது அதில் வனபல பரிபாலன சபை மற்றும் தொல்லியல் திணைக்கள பிரச்ச்ஜ்னை காரணமான திட்டங்கள் அமுலாக்குவதில் தாமதங் கள் ஏற்பட்டுள்ளன. அதனால் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தோம்.




அதில் சில பிணக்குகள் தீர்கப்பட்டுள் என. சில திணைக்களம் சார்ந்த விட யங்கள் தொடர்பாகவும் தீர்வுகளைக் கண்டுள்ளோம். அதேவேளை அந்தந் பிரதேசங்களுக்கு இரண்டு வாரத்தில் நேரே சென்று ஊக்கப்படுத்துவதும், அதன் தடைகளை நீக்கி கொடுப்பதும், ஆரம்பித்த பணிகளை 75 நாள்களில் முடிப்பது எனவும், அடுத்து சிறு திட்டங் களை பொது அமைப்புக்களுக்கு கொடுத்து முடிவுறுத்துவது எனவும் தீர்மானித்துள்ளோம்.

அடையாளப்படுத்திய சில பிரச்சி னைகளில் வேறு பிராந்தியத்தில் இருந்து ஒப்பந்தத்தை பெறுபவர்கள் இந்தக் களச் சூழல் தெரியாது எங்களு டைய வேலையாள்களின் மனநிலை தெரியாது சில குழப்பங்கள் ஏற்பட்டுள் என. எனவே பணிப்பாளர் உலக வங்கியுடன் ஆலோசனை குழுவுடன் பேசி பிராந்தியத்தில் இருக்கின்ற ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்தால் விரைவாக வேலைகளை முடித்து கொடுக்க முடியம் என நம்புகின்றோம்.

விவசாயத்தை இரட்டிப்பாக வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். 2 லட்சம் காணிகளில் நெல் செய்கின் றோம். இதில் இரண்டாவது போகத்தில் 80 ஆயிரம் ஏக்கரில் நெல் உற்பத்தி செய்கின்றோம். இதனை ஒரு லட்சமாக 2025ஆம் ஆண்டு உயர்த்தி நவீன விவசாய துறையில் ஒரு பெரிய மாற் றத்தை ஏற்படுத்துவது இலக்கு.

மந்தனாறு திட்டம் நல்லாட்சி காலத் தில் அடிக்கல் நாட்டப்பட்டது. இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக் கின்றது. சர்வதேச நாணய நிதியக் கொடுக்கல் – வாங்கல் திட்டம் பூர்தியான பின்னர் பிரெஞ் அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தில் கைசாத்திட்டது. அதில் 15 ஆயிரம் ஏக்கர் ஏனைய சிறிய திட்டங்கள் உடாக 5 ஆயிரம் ஏக் கரை கூட்டுவதற்கு முடிவு எடுத்துள் ளோம்.

மாவட்டத்தில் அபிவிருத்தி திட் டங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு 5 கோடி ரூபாவும் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து சில உறுப்பினர் களுக்கு அதிகமாகவும் ஒதுக்கப்பட் டுள்ளது. மாவட்ட அபிவிருத்தி நிதிக்காக ரூபா 500 மில்லியனுக்கு மேலாக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் வீதி அபிவிருத் திக்காக 6 பில்லியன் ரூபா அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் 7 பில்லியன் ரூபா அளவில் அடுத்த மாதம் வேலைதிட்டம் ஆரம்பிக்கவுள் ளது. அதேவேளை உலக வங்கியின் திட்டத்தி 576 மில்லியன் ரூபா அளவு எதிர்பாக்கின்றோம்.

ஜனாதிபதி தேர்தல் ஒக்டோபர் இடம்பெறும் அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் முதல் நடந் தால் நல்லது என்பது எனது தனிப்பட்ட கருத்து.

இருந்த போதும் ஜனாதிபதித் தேர் தலை எதிர் கொண்டாக வேண்டும். நாடு ஒரு சிக்கலான சூழலில் இருந்தது. அதில் இருந்து மீட்டு நம்பிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தியுள்ளார்.

நாங்கள் ஒரு தொங்கு பாலத்தால் நடந்து செல்வதாகவும், இந்த பாலத்தை கடந்துதான் ஆகவேண்டும் என ஜனா திபதி தெரிவித்துள்ளார். எனவே அந்தப் பாலத்தை கடந்து உறுதியான ஒரு பொருளாதார கட்டமைப்பு உருவாக வேண்டுமாக இருந்தால் அவர் இந்த நாட்டுக்கு தொடர்ந்து சேவையாற்ற வேண்டும் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடு. அது குறித்து எங்களுடைய கட்சியில் பேசிவருகின்றோம்.

அடுத்த தலைவராக உறுதியான எதிர்பார்ப்பு இல்லாத திட்டத்தோடு இருக்கின்ற தலைவர்களை தற்போது காணமுடியாது இருக்கின்றது. அந்த அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டி யிட்டால் அவரை வெல்ல வைப்பதற்கான ஆலோசனைகளை செய்து கொண்டி ருக்கின்றோம். – என்றார்.

# தோட்ட நிறுவனங்களின் யோசனைக்கு அரசாங்கம் இன்னும் இணங்கவில்லை

## தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,200 ரூபா அடிப்படை சம்பளமாக வழங்குவதற்கான யோசனையை பெருந்தோட்ட நிறுவனங்கள் தம்மிடம் கையளித்துள்ள போதிலும் அதற்கு அரசாங்கம் இன்னும் இணங்கவில்லை என தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை - அக்குனு கொலபெலஸ்ஸவில் நேற்று நடைபெற்ற



நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பு தொடர்பான யோசனையை தொழிற்சங்கங்களுக்கு வழங்கியுள்ளன. எதிர்வரும் 15 ஆம் திகதியின் பின்னர் இறுதித் தீர்மானத்திற்கு அவர்கள் வரவில்லையாயின், 1350 ரூபா அடிப்படை சம்பளத்துடன் 1700 ரூபாவை சம்பளமாக நிர்ணயித்து இறுதி வர்த்தமானியை வெளியிட வேண்டியேற்படும் என்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டார்.

# தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பிரதிநிதி இலங்கைக்கு வருகிறார்

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அடுத்த வாரம் நாட்டிற்கு வருகைதரவுள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு அவர் விஜயம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இலங்



கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அமெரிக்காவினால் வழங்கப்படும் உதவிகள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுதந்திரமான, திறந்த மற்றும் வளமான இந்தோ-பசுபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்காவின் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துவதே, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளரின் விஜயத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மத்திய வங்கியின் ஆளுநர் அமெ. தூதரைச் சந்தித்தார்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கை சந்தித்துள்ளார்.

இருதரப்பு உறவுகள், கடன் மறுசீரமைப்பு, தற்போதைய மறுசீரமைப்புகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அமெரிக்க தூதரகத்திற்கு வருகை தந்தார் என அமெரிக்கத் தூதுவர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

வலுவான, ஆற்றல் மிக்க பொருளாதாரத்தை இலங்கையில் கட்டியெழுப்புவதற்காக அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளித்து வரும் நிலையில் நல்லாட்சி, வெளிப்படைத்தன்மையின் அவசியத்தை தான் வலியுறுத்தினார் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.




# குருதியால்த் தோய்ந்த நம் தேசத்திற்காய் ஒரு துளி குருதி!

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் சிறிலங்கா இராணுவத்தால் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் நினைவேந்தி குருதிக்கொடை நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 09 மணி முதல் மாலை 03.00 மணி வரை நடைபெறவுள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இனப்படுகொலை செய்யப்பட் தமிழ் மக்களின் நினைவேந்தி நடைபெறும் குருதிக்கொடையில் பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் மட்டுமன்றி பொதுமக்களும் கலந்து கொண்டு குருதிக் கொடை செய்ய முடியும் என ஒன்றியம் தெரிவித்துள்ளது.





# மார்ச் 12 இயக்கத்தின் கலந்துரையாடல் நேற்று திருகோணமலை செயலகத்தில்!

(எஸ்.கீதபொன்கலன்)

மார்ச் 12 இயக்கத்தின் பத்தாவது மக்கள் கலந்துரையாடல் நேற்று சனிக் கிழமை திருகோணமலை மாவட்ட செயலகத்தின் பிரதான மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், திருகோ ணமலை மாவட்டத்தின் குவேனி ஆதி வாசி மக்களின் தலைவர், தெலுங்கு மக்கள் குழுமத்தின் தலைவர், விவசாய அமைப்புக்களின் தலைவர்கள், மீன்பிடி சம்மேளனங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் பல்கலைக்கழக மாண வர்கள், ஊடக அமைப்புகளின் பிரதி நிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

'தூய்மையான அரசியலுக்காய் ஒன்றிணைவோம்' என்ற தொனிப் பொருளில் மார்ச் 12 இயக்கம் நாடு முழுவதும் இது வரை 9 மக்கள் கலந்து ரையாடல்களை நடத்தி உள்ளது. இந் நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி சார்பில் மாவட்ட அமைப்பாளர் த.புஸ் பராசா,தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட செயலாளர் அருண் ஹேமச்சந்ரா, அகில இலங்கை தேசிய மக்கள் காங் கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் அப்துல்லா மஹ்ரூப், தேசிய காங்கிரஸ் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.எஸ்.நவாஸ் போன்றோர் கலந்துகொண்டனர்.

பொதுக் கலந்துரையாடலாக நடைபெற்ற இந்நிகழ்வில் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் பொது மக்கள் பல் வேறுபட்ட அரசியல் தொடர்பான கேள்வி களைக் கேட்டு பதில்களைப் பெற்றக் கொண்டனர்.



திருகோணமலை மாவட்டத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளை கொண்ட கட்சிகளின் சார்பில் எந்த ஒரு பிரதிநிதியும் இவ் கலந்துரையாடலுக்கு வருகை தரவில்லை. தம்மால் உரிய முறையில் அழைப்பு விடுக்கப்பட்டது, எனினும் இவர்கள் வருகை தரவில்லை என மார்ச் 12 இயக்கத்தின் அழைப்பாள ரான 'பவ்ரல்' அமைப்பின் தேசிய அமைப்பாளர் சுஜீவ கயானாத் நிகழ் வின் போது கவலை தெரிவித்தார்.

### கட்சியினர் மத்தியில் அமைச்சர் டக்ளஸ் தம்பட்டம்:

# நீரின் ஊடாக நெருப்பையும் கூட கொண்டு செல்வர் ஈ.பி.டி.பியினர்

## அவர்களுக்குப் பயந்தேதான் பிரபாகரன் தமிழ்க் கூட்டமைப்பு என்ற உருளைக்கிழங்குகளைச் சேர்த்து மூடையாக இறுகக் கட்டினாராம்

நீரின் ஊடாக நெருப்பையும் கொண்டு செல்லும் ஆற்றல் உள்ளவர்கள் ஈ.பி.டி.பியினர் என்ற அரசியல் அச்சம் காரணமாகவே ஆங்காங்கே பதுங்கியிருந்த சில தமிழ் தரப்புக்களை ஒன்றிணைத்து உருழைக்கிழங்கு மூடை போன்று இறுகக்கட்டப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற ஒன்றை அன்று புலிகளின் தலைவர் பிரபாகரன் உருவாக்கியிருந்தார் என சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புலிகள் அமைப்பின் தலைமை இல்லாதெழிந்த பின்னர் இன்று அந்த கூட்டமைப்பு என்ற உருழைக்கிழங்கு மூட்டை கட்டவிழ்ந்துவிட்டதுடன் திக்குத்திசை தெரியாது ஊருண்டு ஓடிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறானவர்களால் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு எதுவித விமோசனங்களும் கிடைக்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்

அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு மற்றும் வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய கட்சியின் பொறுப்பாளர்கள், வட்டார செயலாளர்கள், வட்டார நிர்வாக உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு நேற்று சுன்னாகத்திலுள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

1987 களின் பிற்பகுதியில் ஆயுதப் போராட்டம் எமது மக்களின் அரசியல் உரிமைகளையும் அபிலாசைகளையும் வென்றெடுப்பதற்கு சாத்தியமற்றதென முடிவெடுத்து நாம் அரசியல் ஜனநாயக நீரோட்டத்தில் காலடி வைத்தபோது சிலர் எம்மை கேலி செய்து எள்ளி நகையாடியிருந்தனர். ஆனாலும் நாம் அதற்கு செவி சாய்த்திருக்கவில்லை.

இந்த ஜனநாயக வழிமுறையின் ஊடாக 1994களில் நாம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 9 நாடாளுமன்ற உறுப்பினர்களாக அதாவது யாழ்., கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களின் 9 மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றிருந்தபோது அவ்வாறு ஏளனம் செய்தவர்கள் கூனிக் குறுகிப்போயினர்.

இவ்வாறாக சாத்தியமான வழிமுறையூடாக நாம் முன்னெடுத்த பொறிமுறையின் வெற்றியால் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் எம்மை நோக்கி அணிதிரளத் தொடங்கியிருந்தனர்.

இதை சற்றும் எதிர்பார்த்திராத பிரபாகரன் எமது அரசியல் வளர்ச்சியைக் கட்டு அச்சமுற்று தன்னால் அச்சுறுத்தலுக்குள்ளாகி ஒளிந்திருந்த தமிழ் தரப்பினரை அழைத்து தமது அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கும் வகையிலான கட்டமைப்பாக இந்தத் தமிழ்த் தேசியஜ் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த கட்டமைப்பு உருவாக்கப்பட்டதும் எம்மை அரசியல் ரீதியில் வெற்றிகொள்ள முடியாதென தெரிந்திருந்த நிலையில் எம்மீது அதிகளவான சேறு பூசல்களையும் அவமானங்களையும் பொய்யான குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து மக்களிடையே பிரசாரங்களை தீவிரமாக முன்னெடுத்து தமது தேர்தல் வெற்றிகளை உறுதி செய்து கொண்டிருந்தனர்.

அனால் 'உண்மை வெகுநாள் உறங்காது' என்பது போன்று 2009 இல் புலிகள் தலைமை அழிக்கப்பட்ட பின்னர் அந்த கூட்டமைப்பு தமது சுயரூபங்களை காட்டத் தொடங்கியுள்ளது மட்டுமல்லாது அதன் உண்மை முகங்களும் மக்களிடையே வெளிப்பட தொடங்கியது.



அத்துடன் யுத்தத்தால் நொந்துபோயிருந்த தமிழ் மக்களை தமது சுயநலங்களுக்காக மீண்டும் பகடைக்காய்களாக பயன்படுத்த தொடங்கினர் கூட்டமைப்பினர். இதன் காரணமாக மீண்டும் மக்கள் அவலங்களைச் சந்திக்க நேரிட்டது.

ஆனால் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் என்றும் எமது கொள்கை நிலைப்பாட்டில் இருந்து மாறியவர்கள் கிடையாது. அதனால்தான் ஈ.பி.டி.பி. ஆகிய நாங்கள், எமது மக்களுக்கு சரியான வழியைக் காட்டுகின்ற தனித்துவமான தரப்பாக இருந்து வருகின்றது.

இதே நேரம் எமது கொள்கைகள்தான் தமிழ் மக்களின் எதிர்காலத்தை வெற்றிகொள்ளும் சக்தியாகவும் உள்ளது. மக்கள் எதிர்கொள்ளுகின்ற அன்றாடப் பிரச்சினைகள் முதல் அபிவிருத்தி உள்ளடங்கலான அரசியல் தீர்வு வரையிலான மூன்று 'அ' க்களுக்கும் முன்னுரிமை அடிப் படையில் தீர்வுகளை முன்வைக்க முடியும் என்று நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

அதுமட்டுமல்லாது கடந்த பல வருடங்களாக பல்வேறு விடயங்களில் எமது முன்னகர்வுகள் நிரூபிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கு நாம் கட்டி வளர்த்துள்ள தேசிய நல்லிணக்கமும் கணிசமான பங்களிப்பை செய்திருக்கிறது.

இதேநேரம் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை களையும் அவலங்களையும் அரசியல் கோஷங்களாக பயன்படுத்தி குறுகிய அரசியல் ஆதாயம் தேடும் தரப்புக்கள், தமது நலன்களுக்காக தமிழ் மக்களை இன்னுமொருமுறை பலிக்கடாவாக்க முனைகிறார்கள்.

இவ்வாறான அறிவிலித்தனமான முயற்சிகள் கடந்த காலங்களில் ஆயுதப் போராட்ட குழுக்களினாலும் மிதவாத தமிழ் தலைமைகளினாலும் பலமுறை முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அவற்றினால் எமது மக்களுக்கு எந்தவித நன்மைகளும் கிடைக்கவில்லை. மீளமுடியாத பின்ன டைவுகளையே ஏற்படுத்தியிருந்தன.

அந்தவகையில் எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அரசியல் தீர்வுப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, தற்போது கிடைக்கவுள்ள இந்த காலகட்டத்தை நாம் தவற விடுவோமானால், மீளவும் இத்தகையதொரு பொன்னான காலத்தை நினைத்துப் பார்க்க இயலாது என்றே கருதுகிறேன். – என்றார்.



# கலைந்து செல்லும்
## ‘பொது வேட்பாளர்’ எனும் மாய மான்!

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது தொடர்பிலான உரையாடல்கள் மெல்ல வலுவிழக்கத் தொடங்கிவிட்டன. ஜனாதிபதித் தேர்தல் வரும் செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரையான காலப்பகுதிக்குள் ஒருநாள் நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துவிட்டது. அதன்பிரகாரம் பார்த்தால், இன்னும் நான்கு மாதங்கள் மாத்திரமே ஜனாதிபதித் தேர்தலுக்கு இருக்கின்றன. அதற்குள் தகுதியான வேட்பாளர் ஒருவரை கண்டுபிடித்துத் தமிழ் மக்களிடம் அறிமுகப்படுத்தி, வாக்குகளை கைப்பற்றும் ஆற்றல், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை தூக்கிச் சுமக்கும் தரப்பினரிடம் இருக்கின்றதா என்றால், அதற்கான சாத்தியங்கள் இல்லை.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் இப்போது, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பக்கத்துக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. அந்தக் கட்சிக்குள் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட சிலர் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்துக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டு வந்திருக்கிறார்கள். அதேவேளை, எம்.ஏ.சுமந்திரன், சீ.வி.கே.சிவஞானம் உள்ளிட்டவர்கள் பொது வேட்பாளர் விடயம் காலத்துக்கு பொருத்தமில்லாத முன்னெடுப்பு என்று கூறி வருகிறார்கள். இவ்வாறான நிலையில், தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு எதிர்வரும் 19ஆம் திகதி வவுனியாவில் கூடவிருக்கின்றது. முதல் நாள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் அஞ்சலி செலுத்திவிட்டு, அப்படியே மத்திய குழுக் கூட்டத்திற்கு தமிழரசுக் கட்சியின் பிரமுகர்களில் அநேகர் வருவார்கள். அவர்களிடம், பொது வேட்பாளர் விடயத்தை முன்வைத்து எப்படியான உரையாடலை யார் தொடங்குவார் என்பது பிரதான கேள்வி. ஏனெனில், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை தற்போது தாங்கி நிற்பது ஊடக முதலாளி ஒருவர். முள்ளிவாய்க்கால் இறுதி மோதல்கள் மூர்க்கம் பெற்றிருந்த போது, அந்த ஊடக முதலாளியின் நடவடிக்கைகள் எந்தத் தரப்பு சார்ந்து இருந்தது என்பது கேள்விக்கு உள்ளாக்கப்படலாம். இறுதி மோதல்கள் காலத்தில் தமிழ்த் தேசியத்தின் ஒருங்கிணைந்த மனநிலைக்கு எதிராக செயற்பட்ட ஒருவர், தற்போது தமிழ் மக்களின் தேசிய உணர்வையும் ஒருங்கிணைந்த குரலையும் பொது வேட்பாளரைக் கொண்டு சர்வதேசத்துக்கு காட்டலாம் என்று கூறும்போது, அது தொடர்பில் எந்த சந்தேகமும் இன்றி, அதற்கு இசைவது எப்படியான அரசியல் புரிதல்?

தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் உள்ள சில ஊடக முதலாளிகளும் வர்த்தகர்களும் தாங்கள் விரும்பும் அரசியலை தமிழ்த் தேசியத்தின் பெயரினால் முன்னெடுக்க முயல்கிறார்கள். அவர்களிடத்தில் தமிழ்த் தேசிய அரசியல் மற்றும் விடுதலை தொடர்பிலான எந்தவித அர்ப்பணிப்பும் இல்லை. அதனை அவர்கள் தங்களில் நடவடிக்கைகளில் வெளிப்படுத்தவும் இல்லை. மாறாக, தங்களின் தனிப்பட்ட ஆதாயம் மற்றும் தமிழ்த் தேசிய அரசியலைச் வெளியாரின் தேவைகளுக்காக கூறையாடுதல் என்கிற திட்டங்களில் போக்கில் தொடர்ச்சியாக செய்து வருகிறார்கள். கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்த பின்னடைவில், இந்த ஊடக முதலாளிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் கணிசமான பங்குண்டு. அவர்கள்தான், கூட்டமைப்புக்குள் வேட்பாளர்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி மக்களை சலிப்படைய வைத்தார்கள். சில வேட்பாளர்கள், இந்த முதலாளிகளின் செல்லப்பிள்ளைகளாக மாறி நின்று சக வேட்பாளர்களை இனத்துரோகியாக சித்திரித்து பேசியமை எல்லாமும் நிகழ்ந்தது. ஆனால், அப்படி எடுப்பார் கைப்பிள்ளையாகிய வேட்பாளர்களின் அநேகர் தோல்வியடைந்தார்கள். ஒருசிலர் மாத்திரம் தப்பிப் பிழைத்தார்கள். அதன்பிறகும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெளிவாக பிரித்தாளப்பட்டார்கள். அதனாலும், தமிழரசுக் கட்சிக்கும் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான விரிசல் அதிகரித்து, கூட்டமைப்பு காணாமல் போனது. இன்றைக்கு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் தங்களுக்குள் கன்னைப் பிரித்துக் கொண்டு சண்டையிடுவதன் பின்னாலும் இந்த ஊடக முதலாளிகளும் வர்த்தகர்களும் கணிசமான பங்கை வகிக்கிறார்கள். அதனை ஒவ்வொரு கட்டத்திலும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களே பொதுவெளியில் பகிரவும் செய்கிறார்கள் என்பதுதான் வேடிக்கை.



புருஜோத்தமன் தங்கமயில்

ஓர் அரசியல் கட்சி, தனக்கான ஒழுக்கத்தைப் பேண வேண்டும். குறிப்பாக தேசிய விடுதலை அரசியலில் ஈடுபடும் அரசியல் கட்சியொன்று தன்னுடைய இலக்கை சீர்குலைக்கும் சக்திகள் எதுவாக இருந்தாலும், அவற்றை தூரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால், தமிழரசுக் கட்சியும், அதன் தலைவர்களும் தேசிய விடுதலைக்கு எதிரான எண்ணங்கொண்ட முதலாளிகளோடும், வர்த்தகர்களோடும் அவர்களின் முகவர்களோடும் இணக்கமாக பயணிக்க முற்படுவது என்பது எவ்வாறான நிலைப்பாடு, அதற்கு என்ன பெயர் சூட்டுவது? தேர்தல் மைய அரசியலுக்குள் சுருங்கிவிட்ட தமிழ் அரசியலில், ஊடக முதலாளிகளும் வர்த்தகர்களும் கட்சிக்காரர்களுக்கு ஆபத்பாண்டவர்களாக தோன்றத் தொடங்கிவிட்டார்கள். அதாவது,

தொடர்ச்சி▼





# கலைந்து செல்லும்

## ‘பொது வேட்பாளர்’ எனும் மாய மான்!

தொடர்ச்சி▲

ஊடக முதலாளிகளைப் பகைத்துக் கொண்டால், தேர்தல் காலங்களில் தங்களை ஆதரிக்க மாட்டார்கள். அதிலும், தங்களுக்கு எதிரான செய்திகளை தொடர்ச்சியாக பரப்பி, தோற்கடித்துவிடுவார்கள் என்ற பயம். இந்தப் பயத்தைக் காட்டித்தான், சில ஊடக முதலாளிகள் தமிழ்க் கட்சிகளை தங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப வளைத்து வருகிறார்கள். ஊடக முதலாளிகள் அதனை வெளிப்படையாகவும் அதிக தருணங்களிலும் மிரட்டலாகவும் கட்சிகளை நோக்கிச் செய்கிறார்கள். இப்போது, தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்திற்குப் பின்னால் தமிழ்க் கட்சிகளை அணி திரட்டும் முயற்சிக்குப் பின்னாலும் அவ்வாறான அணுகுமுறை இருக்கின்றது. ஊடக முதலாளிகள் முன்னெடுக்கும் பொது வேட்பாளர் விடயத்தை பொது வெளியில் எதிர்த்தால், அந்த முதலாளிகள் நாளைக்கு பொதுத் தேர்தல் காலத்தில் தங்களுக்கு எதிராக செய்திகளை வெளியிட்டு அச்சுறுத்துவார்கள் என்கிற பயமும் பதற்றமும்தான், அந்த முதலாளிகளின் இழுப்புக்கு எல்லாம் வளைந்து கொடுப்பதற்கு காரணமாகும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் தமிழ் மக்களிடம் எந்தவித அதிர்வையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, சில கட்சிகளும் அரசியல் ஆய்வாளர்கள் என்று சொல்லிக் கொள்ளும் சிலருமே அதனைப் பிடித்து உருட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆய்வாளர்கள் கடந்த காலங்களில் முன்வைத்த ஆக்கபூர்வமான ஆய்வுகள் என்று எதனையும் சொல்ல முடியாது. அதிக தருணங்களில் மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு எதிரான நிலைப்பாடுகளை எடுத்து வைத்து, அதனை அறிவுபூர்வமான அரசியலாக சித்திரிக்க முயன்றவர்கள். பத்திரிகைகளில் எழுதப்படும் கட்டுரைகள் மற்றும் மேடைப் பேச்சுக்களைத் தாண்டி அவர்களினால் எந்தவித மாற்றமும் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. ஆனால், அவர்களை அரசியல் கோட்பாட்டாளர்கள், சிந்தனாவாதிகள் என்ற தோரணையில், தங்களின் சுய தேவைக்காக சில அக – புறத் தரப்புக்கள் தோள்களில் ஏற்றிச் சுமந்திருக்கின்றன. அதிக தருணங்களில், அரசியல் ஆய்வாளர்கள் என்று தங்களை முன்னிறுத்துபவர்கள், விமர்சனங்களை சகித்துக் கொள்ளும் அளவுக்கு தங்களை தகவமைத்துக் கொள்ளவில்லை. இதனால், கருத்தியல் ரீதியான விமர்சனங்களை தனிப்பட்ட ரீதியில் உள்வாங்கி அதற்குப் பிரதிபலித்து விடயங்களைச் சுருக்கிக் கொள்கிறார்கள். அது, கிட்டத்தட்ட தமிழ்த் தேசிய அரசியலும் இராஜதந்திரக் கட்டமைப்பும் தன்னுடைய செயற்பாட்டை ‘நிகழ்வுகள்– சம்பவங்களுக்கு’ பிரதிபலிப்பது என்ற அளவில் சுருக்கிக் கொண்டது போன்றது.

பொது வேட்பாளர் விடயம் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் நிராகரிக்கப்படும் சூழல் உண்டு. ஏனெனில், தமிழ் மக்களின் எண்ணங்களுக்கு மாறாக, தனிப்பட்ட சிலரின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய முன்வைக்கப்படும் பொது வேட்பாளர் விடயத்தை தூக்கிச் சுமந்தால் அது, பொதுத் தேர்தலில் கட்சியின் வெற்றியை பதம் பார்க்கும். அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கனவில் இருப்பவர்கள் கவனமாக இருப்பார்கள். அத்தோடு, பொது வேட்பாளர் விடயத்தை மேலெழுப்பிய தரப்பினரின் பின்னணி தொடர்பில் கட்சி உறுப்பினர்கள் சந்தேகத்தை எழுப்புவார்கள். அந்தச் சந்தேகங்களுக்கு திருப்தி கொள்ளும் அளவுக்கான பதிலை வழங்கி, பொது வேட்பாளர் விடயத்தை ஆதரிக்கும் அளவுக்கு அதற்காக வாதிடும் தலைவர்கள் யாரும் தமிழரசுக் கட்சிக்குள் தற்போது இருப்பவர்கள் மாதிரித் தெரியவில்லை. தமிழரசுக் கட்சி பொது வேட்பாளர் விடயத்தை நிராகரித்தால், அதனைக் காட்டி ரெலோவும், புளொட்டும் பொது வேட்பாளர் ஓட்டத்தில் இருந்து விலகிவிடும். ஏனெனில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற கட்டமைப்புக்குள் ரெலோ, புளொட் ஆகியன இருந்தாலும், அந்தக் கட்சிகளுக்கு பொதுத் தேர்தல் தொடர்பிலான எதிர்பார்ப்பு என்பது தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவது சார்ந்தது. ஏதாவது ஒரு விடயத்தை முன்வைத்து மீண்டும் தமிழரசுக் கட்சியோடு கூட்டு வைத்தால் அன்றி, பொதுத் தேர்தலில் வெற்றி என்பது சாத்தியமில்லாமல் போய்விடும் என்பது அந்தக் கட்சிகளுக்குத் தெரியும். அதனால்தான், செல்வம் அடைக்கலநாதனும் தர்மலிங்கம் சித்தார்த்தனும், மாவை சேனாதிராஜா தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தில் தொடர்ந்தும் இருப்பதை விரும்பினார்கள்.

தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தில் யார் இருந்தாலும், அந்தக் கட்சி அடுத்த தேர்தல்களை குறிப்பாக, பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை தனித்தே சந்திக்க விரும்பும். அதன்மூலம், தங்களது கட்சியின் தனித்த பலத்தைக் காட்ட வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. அதனால்தான், உள்ளூராட்சி மன்ற அறிவிப்பு வெளியான தருணத்தில், பங்காளிக் கட்சிகளை கழற்றி விடுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தது. அந்த முன்னெடுப்பில் சுமந்திரன், சிறீதரன் உள்ளிட்ட கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களின் 90 வீதமானவர்கள் ஒற்றுமையாக இருந்தார்கள். அதனால், எப்படியாவது தமிழரசுக் கட்சியோடு மீண்டும் ஒட்டிக்கொள்ளலாம் என்ற செல்வம் மற்றும் சித்தார்த்தனின் எதிர்பார்ப்பு இப்போதைக்கு நிறைவேறாது. ஆனாலும், பொது வேட்பாளர் விடயத்தை

தொடர்ச்சி▼

# கலைந்து செல்லும்

## 'பொது வேட்பாளர்' எனும் மாய மான்!



**தொடர்ச்சி▲**

தமிழரசுக் கட்சி நிராகரித்தால், அதிலிருந்து தாங்களும் விலகிக் கொள்ளுவார்கள். அதனால் பொது வேட்பாளர் விடயத்தை சி.வி.விக்னேஸ்வரனும், சுரேஷ் பிரேமச்சந்திரனும் மாத்திரமே ஊடக முதலாளிகளோடும் அரசியல் ஆய்வாளர்களோடும் சேர்ந்து தொடர்ந்தும் தூக்கிச் சுமக்கும் சூழல் உண்டு. இதில், சுரேஷின் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு மாத்திரமே சில ஆயிரம் வாக்குகளையாவது சேகரிக்கும் வல்லமையுண்டு. ஏனைய தரப்பினர் எல்லாமும் தனித்த தரப்பினர். அவர்களிடம் மக்களிடம் ஒருங்கிணைக்கும் எந்த ஏற்பாடும் இல்லை. கடந்த காலத்தில் அதனை அவர்கள் நிரூபித்தவர்களும் அல்லர்.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சிகளுக்குப் பின்னால், ராஜபக்ஷக்கள் – ரணிலின் வெற்றியை தெற்கில் உறுதிப்படுத்தும் நிகழ்ச்சி நிரல் இருக்கின்றது என்ற சந்தேகம் தமிழ்ச் சூழலில் உண்டு. ஆனால், அந்தச் சந்தேகம் சார்ந்து, பொது வேட்பாளரை முன்னிறுத்த முனையும் தரப்பினர் இதுவரை தெளிவான விளக்கங்களை வழங்கவில்லை. ஒரு நியாயமான அரசியல் கோரிக்கையோ, அதுசார் நிலைப்பாடோ மக்களிடம் எந்தவித சந்தேகங்களையும் எழுப்பாத அளவுக்கு இருக்க வேண்டும். அப்படி ஏதாவது சந்தேகங்கள் எழுந்தாலும் அந்தச் சந்தேகங்கள் மீண்டும் எழ முடியாத அளவுக்கு தெளிவான பதில்கள் மூலம் தீர்த்து வைக்கப்பட வேண்டும். இல்லையென்றால், அந்த அரசியல் கோரிக்கையோ அதுசார் நிலைப்பாடோ மக்களிடம் எடுபடாது. அப்படியானதொரு நிலையே, இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் இருக்கின்றது. ஆரம்பம் முதலே பல கேள்விகளோடும் சந்தேகங்களையும் கொண்டிருக்கும் பொது வேட்பாளர் விடயம், நாள் செல்லச் செல்ல இன்னும் அதிகமான கேள்விகளையும் சந்தேகங்களையும் அதிகரிக்கவே செய்திருக்கின்றது. அவற்றுக்கு பதிலளிக்கும் வல்லமை, அதனை முன்னெடுக்கும் தரப்பினரிடம் இல்லாத போது, அது தானாக கலைந்து செல்லும் மாய மானாக மாறும்.



# பஸ் புரண்டது; பயணிகள் அருந்தப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று நேற்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது பஸ்ஸில் பயணித்தவர்கள் மயிரிழையில் உயிர் பிழைத்தனர்.

கண்டியிலிருந்து பதியபெலெல்லைக்கு பயணித்த இ.போ.சபைக்கு சொந்தமான பஸ் மயிலப்பிட்டிய பகுதியில் காலை 10 மணியளவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து சம்பந்தமாக கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# அம்பாறையில் இனங்களுக்கு இடையிலான சமூக ஒற்றுமை தினம் நேற்று முன்னெடுப்பு!

## மூவினப் பங்களிப்போடு சமாதான நடை பவனி

( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறையில் இனங்களுக்கிடையிலான சமூக ஒற்றுமை தினம் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

சமாதானம் சமூகப்பணி நிறுவனம் வரப்பத்தான்சேனை சந்தியில் இருந்து இறக்காமம் கலாசார மண்டபம் வரை ஊர்வலம் ஒன்றை இத்தினத்தை ஒட்டி முன்னெடுத்தது.

பதியத்தலாவ, இறக்காமம், தமண, நிந்தவூர், காரைதீவு,ஆகிய பிரதேச நல்லிணக்க குழுக்கள் இதிக் கலந்து கொண்டன.

அம்பாறௌ மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேத. ஜெகதீசன், சமாதானமும் சமூகப் பணியும் நிறுவனத்தின் பணிப்பாளர் த.தயாபரன், த.ராஜேந்திரன் மற்றும் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

மூவின மக்களும் நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தினையும் மக்களிடையே எற்படுத்த வேண்டும் என்பதற்காக இச் சமூக வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சமூகங்களுக்கிடையில் சகவாழ்வை கொண்டு வருமுகமாக தமிழ், முஸ்லிம்,பௌத்தர்கள் அனைவரும்இணைந்த சமாதான நடை பவனி இடம்பெற்றது.

இறக்காமம் கலாசார மண்டபத்தில் நான்கு மதங்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.

சமூகங்களுக்குடையில் தப்பான எண்ணங்களை அகற்றி, நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஒருமித்த குரலில் பணியாற்றுவதற்கான செயற்பாடாக இந்நிகழ்வு அமைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதிலே பல்லின சமூகங்களின் கலை கலாசாரங்களை ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு இலங்கையில் ஒற்றுமையான ஒரு அமைதியான சூழ்நிலையை கொண்டு வருவதே இவ் அமைப்பின் நோக்கமாகும் .


















# கரு ஜயசூரிய தலைமையில் திருகோணமலையில் அரசியல் நிலைவரம் தொடர்பிலான கலந்தாய்வு

(ஹஸ்பர் ஏ.ஹலீம்)

எதிர்கால ஜனநாயக ரீதியான அரசியல் தொடர்பில் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் ஏற்பாடு செய்திருந்த திருகோணமலை மாவட்டத்துக்கான கலந்துரையாடல் திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

‘எதிர்கால சந்ததியினருக்கான போற்றத்தக்க நாடு’ எனும் தொனிப்பொருளின் கீழ் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலில் நல்லாட்சியை நோக்கிய பயணத்திற்கு தெரிவு செய்ய வேண்டிய பாதை, நாட்டின் அரசமைப்பு, அரசமைப்பு உருவாக்கத்தின் போது தெரிவு செய்ய வேண்டிய வழி மற்றும் தேர்தல் நடவடிக்கைகள் எனப் பல விடயங்கள் போது ஆராயப்பட்டன.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னால் உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.













# காற்றாலையும் கனிம அகழ்வும் மன்னார்த் தீவை மயான பூமி ஆக்கப் போகின்றனவா?

இலங்கையின் மேற்கு மூலையில், இந்தியாவுக்கு மிகவும் அண்மித்த – வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த – இயல்பான இயற்கை சூழமைவுகளைத் தன்னகத்தே கொண்ட சுதேசிய குடிமக்கள் செறிந்து வாழும் மாவட்டம் மன்னார் ஆகும். இது, நீர் வளமும், நிலவளமும், கடல் வளமும், கனிம வளமும் கொண்ட அழகிய வரலாற்று அம்சங்களையும், வரலாற்று படிமங்களையும் தன்னகத்தே கொண்டதாகும்.

இது, 2002.25 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பைக் கொண்டது. ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியது. 48,129 குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 62,129 பேர் இங்கு ஜீவிக்கின்றனர். இதில் 67,376 இஸ்லாமியர்களும், 65ஆயிரத்து929 கத்தோலிக்கர்களும், 27 ஆயிரத்து 796 இந்துக்களும, 855பௌத்தர்களும் அடங்குகின்றனர்.

இலங்கையில் எங்கும் இல்லாத வகையில் அதி தீவிர மத உணர்வு உடையவர்களையும், வாழ்வியலின் சகல அம்சங்களையும் மத கோட்பாட்டுடன் இணைக்கும் அடிப்படைவாதிகளையும் உள்ளடக்கி, பகுத்தறிவை சற்றும் உணர்ந்து பார்க்காத சமூக கட்டமைப்பை செறிவாகக் கொண்ட – மத முரண்பாட்டுக்குப் பெயர் போன – மாவட்டமும் இதுவாகும்.

அரசியல் தலைமைத்துவம் என்பது இங்கே மிக நீண்ட காலமாக வெற்றிடமாகவே உள்ளது. இராயப்பு சோசப் ஆண்டகையின் மறைவுக்கு பின்னர் உரிமைக்குரலும் நலிவுற்றே காணப்படுகின்றது. கனிம படிமங்கள், எரிபொருள் ஆய்வுகள் என பலவளமுள்ள இடத்தை பொருள்முதல்வாத உறவில் உள்ள பல சர்வதேச கோப்பரேட் நிறுவனங்கள் வளச்சுரண்டலுக்கான தமது கழுகு பார்வைக்குள் மன்னாரை புகுத்தி பல வருடங்கள் ஆகிவிட்டது. தற்போது அதற்குரிய காலம் கனிந்து விட்டது.

மன்னார்தீவு என்பது புவியியல் கட்டமைப்பு ரீதியாக மிகவும் பலவீனமான தீவு ஆகும். சாதாரண தரைத் தோற்ற நில அமைப்பை விட மன்னார்த்தீவு மிகவும் தாழ்வானது. ஒரு பேசின் போன்றது.

ஐம்பது ஆண்டுகளில் அழியும் தீவுகளில் மன்னாரும் ஒன்று என யுனஸ்கோ நிறுவனம் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டதன் காரணத்தால்தான் மன்னார்த் தீவில் மூன்று மாடிக்கு மேல் கட்டடங்கள் அமைப்பதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படுவதில்லை. மிகவும் பலவீனமான தீவு என்பதால் இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ள கூடிய வகையில் வலிமை குறைந்த தீவாகும். மிகக் குறுகிய நிலப்பரப்பை கொண்ட தீவு என்பதால் இயற்கை பேரிடர்களான நில அதிர்வு, சுனாமி, புயல், பெருவெள்ளம் போன்றவற்றை எதிர்கொள்ளக்கூடிய வலிமையற்ற தீவாகவே காணப்படுகிறது என பல துறை சார்ந்த வல்லுனர்களால் காலத்துக்கு காலம் எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. இதற்கு மாறாக அரசு தான்தோன்றித்தனமாக செயல் பட்டு வருகிறது.



வி.எஸ்.சிவகரன்

நிலை பெறுதகு வலு அதிகார சபை 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி 1852/2 இலக்கமுடைய வர்த்தமானி மூலம் 202 ஹெக்டேயர் நிலப்பரப்பு கையகப்படுத்த அறிவித்தல் வெளியாகி இருந்தது. இதற்கு முதலில் இலங்கை மின்சார சபையால் தம்பவனி என்னும் பெயரில் காற்றாலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு காற்றாலைக்கு ஏழு ஏக்கர் நிலம், கையகப்படுத்தப்படுகிறது 30 காற்றாலைகள் தாழ்வுபாட்டில் இருந்து நடுக்குடா வரை அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு காற்றாலையிலிருந்து 3.4,5 மெகாவாட் மின்சாரம் நாளொன்றுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. 30 காற்றாலையிலும் இருந்து 102.5 மெகாவாட் மின் உற்பத்தியாகிறது. இதன் இரண்டாவது பகுதி 21 காற்றாலை 50 மெகாவாட் மின்சாரம் பெறுவதற்குரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஆனால் மக்களின் எதிர்ப்பாலும், கரையோர மீன்பிடி பாதிக்கப்படுவதாக மீனவர்களின் தொடர்ச்சியான குற்றச்சாட்டும் போராட்டத்தாலும் 11 காற்றாலை அமைப்பதிலிருந்து இலங்கை மின்சார சபை பின்வாங்கியுள்ளது. எஞ்சிய 10 காற்றாலை மாத்திரமே அமைக்க உள்ளது.

இதில் சௌத்பார் மற்றும் தோட்டவெளி பகுதியில் டுவுடு தனியார் கம்பனி நான்கு காற்றாலைகள் அமைக்க அனுமதி கோரி உள்ளது. இதேபோல் மன்னார் சிலாவத் துறையில் இருந்து முள்ளிக்குளம் வரை 34

தொடர்ச்சி▼



# காற்றாலையும் கனிம அகழ்வும் மன்னார்த் தீவை மயான பூமி ஆக்கப் போகின்றனவா?

தொடர்ச்சி▲

காற்றாலையில் இருந்து 100 மெகாவாட் மின்சாரம் பெறுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறே நறுவிலிக்குளம் பகுதியில் வின்போஸ் தனியார் நிறுவனம் ஆறு காற்றாலைகள் அமைத்து 2.5 மெகாவாட் மின்சாரம் வீதம் 15 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி நடைபெறுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் பளை பகுதியில் வின்போஸ் தனியார் நிறுவனம் 16 காற்றாலைகளை அமைத்து 2.5மெகாவாட் வீதம் 40 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது. தனங்கிளப்பில் டுவுடு தனியார் நிறுவனம் எட்டுக்காற்றாலைகளை அமைத்து 2.5 மெகாவாட் மின்சாரம் விதம் 20 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாக்குகிறது. பூநகரிப்பிரதேசத்திலும் அதானி கிரீன் எனர்ஜி சிறிலங்கா நிறுவனம் 250 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய காற்றாலை அமைக்க உள்ளது.

தலைமன்னார் வடக்கிலிருந்து எருக்கலம்பட்டி மேற்கு வரை அதானி கிரீன் எனர்ஜி சிறிலங்கா நிறுவனம் 52 காற்றாலைகளை அமைத்து 250 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யவுள்ளது. ஏறக்குறைய 442 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்யவுள்ளது. எந்தக் கேள்விக் கோரலும் இன்றி அதானி நிறுவனத்துக்கு இந்த ஒப்பந்தங்களை அரசு வழங்கியுள்ளது. இவர்களால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை ஒரு யூனிட் எட்டு அமெரிக்க டொலருக்கு வாங்குவதாகவும் ஒப்பந்தமாகியுள்ளது. ஆனால் சந்தையின் அதன் பெறுமதி மிகவும் குறைவானது. அதனால் அரசுக்கு ஆண்டுதோறும் 3369மில்லியன் இழப்பு ஏற்படலாம் என கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் அதானி நிறுவனம் பல ஆயிரம் கோடி ரூபா இலாபமீட்டவுள்ளது.

இதில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கை உள்ளூர் எதிர்ப்புகள் பற்றி கிஞ்சித்தும் சிரத்தை கொள்ளப்படவில்லை.

முறையாக கள ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட வில்லை. அதானி நிறுவனத்துக்கு சார்பாகவே இதன் அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பது ஓர் ஊழல் அதிகார சபை. இதன் இரண்டு முன்னாள் தலைவர்கள் லஞ்சம் பெற்ற மையால் சிறையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே அவர்களது அறிக்கையின் நம்பகத்தன்மை எப்படி இருக்கும் என்பது ஊரறிந்த உண்மை.

இந்த அறிக்கையும் தகவல்களும் முற்றிலும் முன்னுக்குப் பின் முரணானவையும், தவறானவையும், பொய்யானவையும், ஒரு பக்க சார்புடையவையுமாகும். மாற்றுக் கருத்துக்களையோ, மாற்றுஇடம் பற்றிய முன்மொழிவையோ, முறையாகப் பேணவில்லை. விலை மனுவும் கோரவில்லை. ஆகவே இது பாரிய முறைகேடான – சட்டவிரோதமான – செயல்பாடாகும் என்கிறார் கலாநிதி ஜகத் குணவர்த்தன.

இலங்கைக்கு வரும் புலம்பெயர் பறவைகளால் 10 இலட்சம் வரையான பறவைகள் அக்டோபர் மாதம் முதல் மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் தங்கி இருக்கின்றன. ஆகவே புலம்பெயர் பறவைகள் வராத காலப்பகுதியில் ஆய்வறிக்கைகளை மேற்கொண்டு விட்டு, புலம்பெயர் பறவைகளுக்கு இடையூறு இல்லை என்று கூறியுள்ளனர். இது பெரும் தொழில்நுட்ப தவறாகும். அத்துடன் இவர்கள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை பகல் பொழுதில் நடந்து சென்றே ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். அதனால் ஆயிரக்கணக்கான புலம்பெயர் பறவைகள் இரவு நேரத்தில் பறக்கின்றமையை செய்மதி தொழில் நுட்பத்தினூடாக விஞ்ஞான ரீதியில் சுட்டிக்காட்டி உள்ளோம் என்கிறார் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறை பேராசிரியர் சம்பத் செனவிரத்தின

இவற்றில் இரண்டரை இலட்சம் தொடக்கம் 4 இலட்சம் வரையான பறவைகள் காணப்படுகின்றன. அவை பகலில் வனப்பகுதியில் தங்கி இருந்து, இரவு நேரத்தில் பறக்கும் பறவைகள். அவை தொடர்பில் இவர்களது ஆய்வறிக்கையில் எங்கும் கோடி காட்டப்பட வில்லை எனவும், அது ஏன் எனவும் கேள்வி எழுப்பி யுள்ளார்.

வான் பரப்பில் பறவைகளுக்குப் பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் மிகவும் வேடிக்கையான – நகைச்சுவையான– முறையில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் காணப்படுகிறது. அதானி நிறுவனத்திற்கு காற்றாலை திட்டத்தை வழங்க வேண்டும் எனும் நோக்கிலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதா எனவும் பேராசிரியர் சம்பத் செனவிரத்ன கேள்வி எழுப்புகிறார்.

காற்றாலைகளில் பறவைகள் மோதுவதை தடுப்பதற்கான சுற்றாடல் பாதிப்புகள் தொடர்பான அறிக்கையை ரமணி எல்லே பொல தலைமையில் ஒரு குழு ஆய்வு செய்து அறிக்கையை தயாரித்தது. அதில் பறவைகள் மற்றும் மிருகங்களுக்கு ஏற்படுகின்ற

தொடர்ச்சி▼

# காற்றாலையும் கனிம அகழ்வும் மன்னார்த் தீவை மயான பூமி ஆக்கப் போகின்றனவா?

**தொடர்ச்சி▲**

பாதிப்புகள் தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் தேவக்க வீரக்கோன், மூலிகைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக கலாநிதி ஹிமேஸ்ஜயசிங்க, நீர் நிலைகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பாக டி.ஏ.ஜே. ரண்வல ஆகியோர் ஆராய்ந்தனர். ஆனால் முறையான தகவல்களை வழங்கவில்லை எனும் குற்றச்சாட்டும் உண்டு. இதில் தாம் இரவு வேளைகளில் புலம்பெயர் பறவைகள் தொடர்பில் ஆராயவில்லை என்கிறார் கலாநிதி தேவக்க வீரக்கோன். பறவைகள் காற்றாலையில் மோதுவதை முழுமையாக தடுக்க முடியாது, குறைக்கவே முடியும் எனவும் கூறுகிறார்.

காற்றாலை அமைக்கும் பகுதியில் வீதிகள் அமைப்பதால் இயற்கை நீர்நிலைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு மன்னார் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்கிறார் சுற்றாடல் நீதிக்கான நிலையத்தின் மூத்த ஆலோசகர் ஹெமந்த விதானகே. கடந்த வருடங்களில் பேசாலை பகுதி நீரில் மூழ்கியது குறிப்பிடத்தக்கது.

ஆகவே காற்றாலை அமைப்பதற்கு எதிரான மன்னாரில் உள்ள பொது அமைப்புகளின் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஜனாதிபதி உட்பட பல அதிகாரிகளுக்கு முறையீடுகள் செய்யப்பட்டன. இது தொடர்பில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பல கூட்டங்களில் முழுமையான எதிர்ப்புகளை காட்டப்பட்டன. இருந்த போதும் இவை அனைத்தையும் அரசு கண்டு கொள்ளவில்லை. தன் திட்டத்தைச் செயல்படுத்தவ. அது முனைப்பு காட்டி வருகிறது.

உலகின் புவி வெப்பமயமாதல் காரணத்தால் இயற்கையின் மாறுபாடு உலகம் முழுவதும் ஏற்பட்டு வரும் சூழ்நிலையில், அவற்றை தடுப்பதற்குரிய வழிகள் இல்லாமல் உலகம் தடுமாறுகின்ற நிலையில், மன்னார் தீவுப் பகுதி அதனை தாக்குப்பிடிக்க கூடிய வலிமை எதுவும் இல்லை என்பதே சமூகவியலாளர்களின் எதிர்ப்புகளுக்கு காரணம் ஆகும். உலகளாவிய ரீதியில் பல ஆய்வாளர்களும் பாதிப்புகளைச் சுட்டிக்காட்டி உள்ளனர். ஆனாலும் அரசாங்கம் செவி சாய்ப்பதாக இல்லை.

பொருளாதார ரீதியாக இந்திய நலன்களை அதிகம் பெற்றுக் கொண்டாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய அதிகார வர்க்கத்துக்கும் அதிக நல்லுறவு இன்மையாலும், ரணில் ஜனாதிபதியாகத் தொடர்வதை அவர்கள் ரசிக்கவில்லை எனும் விமர்சனமும் உண்டு.

இந்தப் பின்னணியில், இலங்கையில் தேர்தலை எதிர்கொள்ள உள்ள சூழ்நிலையில், ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் முரண்பட விரும்பமாட்டார் என்றே தோன்றுகிறது. இக்காற்றாலை விவகாரம் சம்பந்தமாக ஜனாதிபதி எவருடனும் உரையாடுவதற்குக் கூட தயாராக இருக்கிறார் எனத் தெரியவில்லை. ஏனெனில் இந்தியாவுடன் முரண்பட வேண்டிய நிலை ஏற்பட்டு, அவ்விதமாக முரண்பட்டால் தன்னை வேறு விதமாக அதிகாரத்தில் இருந்து அகற்றி விடுவார்கள் என அரசியல் கணக்கு அவர் போடலாம். எல்லாமே பதவி நலன் சார்ந்த செயற்பாடுகளும் தீர்மானங்களுமே.

இதில் ஏலவே அமைக்கப்பட்ட காற்றாலைத் திட்டத்திற்கு இல்லாத எதிர்ப்பு அதானி திட்டத்திற்கு ஏன் எழுகிறது என இந்தியத் தரப்பு ஆராய்கிறது.

இங்கு கத்தோலிக்கர்கள் செறிந்து வாழ்வதால், வருவத்ய் இந்திய நிறுவனம் என்பதால் குடியேற்றம் ஏதாவது வந்தால் அது இந்துத்துவ கோட்பாட்டை மேலோங்க செய்துவிடும் என மன்னாரில் உள்ள கத்தோலிக்கர்கள் அஞ்சுகிறார்கள் என இந்தியத் தரப்பில் கூறப்படுகிறது. இதில் பெரிய உண்மை இருப்பதாக தெரியவில்லை.

ஆனாலும் இவ்விடயத்தை ஒட்டி பல ஏக்கர் காணிகள் முன்னாள் அமைச்சர் ஒருவரின் பின்னணியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன எனவும், சில இடங்களை அடாத்தாக அபகரித்துள்ளனர் எனவும் உள்ளூர் வாசிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

மன்னாருக்கு வெளியே காற்றாலை அமைக்க வேண்டும் என்பதே பொது அமைப்புகளின் கோரிக்கையாகும். அவர்கள் காற்றாலை திட்டத்தை எதிர்க்கவில்ல. மாறாக மன்னாரத் தீவுப் பகுதியில் அமைப்பதையே எதிர்க்கின்றனர். ம

இதேபோல்தான் கனிம மண் அகழ்வும். கடந்த 2018 டிசம்பர் முதல் ஓரியன் மினரல்ஸ் ஹில் சித்த இன்வெஸ்ட்மென்ட் பிரைவேட் லிமிடெட் அதன் நிதி பங்குதாரர் ஆன டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் - இந்த நிறுவனங்களும் அதானியுடையவையே என கூறப்படுகிறது. 500 ஹெக்டேயர் நிலப்பகுதியில் சுமார் நாலயிரத்திற்கு மேற்பட்ட துளையிட்டு மாதிரிகளை ஆய்வகத்திற்கு அனுப்பியுள்ளனர். இதில் டைட்டானியம் உட்பட பல கனிம தாதுக்கள் உள்ளன எனக் கூறப்படுகிறது. ஆழமான துளையிடுவதன் மூலம் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதுடன் நிலக்கிழ் தட்டுக்களும் அதிர்வடையலாம். அதனால் இயற்கை அனர்த்தங்கள் இயல்பாக நிகழலாம். வறட்சி அதிகரிக்கலாம். விவசாயம் முழுமையாக பாதிக்கப்படலாம். இவை எவையும் கருத்தில் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

இதை அனுமதிக்கும் புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் இலங்கையில் உள்ள ஊழல் நிறுவனங்களில் உச்சம் தொட்டது ஆகும். அதன் வழிகாட்டுதல் நம்பகத்தன்மையை இழக்க வைக்கும் செயற்பாடு ஆகும். இதில் அரசியல் நலன் மற்றும் இலஞ்சமே முதன்மை பெறுகின்றன. இதிலும் கனிம மண் உள்ள பகுதியில் பல இடங்களில் அரசியல் வாதிகளின் பினாமிகள் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை போலி உறுதிகள் மூலம் அபகரித்துள்ளனர். இதனால் மன்னார் தீவுக்கு பேராபத்து ஏற்படலாம். அதனை தடுப்பதற்குரிய போராட்டத்தின் பயன் என்பது பெரும் சவாலாகவே உள்ளது.

காற்றாலை, கனிம அகழ்வுத் திட்டம் போன்ற விடயங்களில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் மௌனம் காக்கின்றனர். அவர்களின் எஜமானர்கள் கோபித்து விடுவார்கள் என்பதால், அந்த மக்களின் வாக்கு பெற்று நாடாளுமன்றம் போனவர்கள் பானிப் பூரிக்காரர்களுக்கு விசுவாசமாக இருக்கிறார்கள் என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த இரண்டு திட்டங்களையும் சிங்களப் புத்தி ஜீவிகள் எதிர்க்கிறார்கள். தமிழ்ஒ புத்திஜீவிகள் என சொல்லப்படுபவர்கள் அரசின் ஏக விசுவாசிகளாக மௌனம் காக்கிறார்கள். ஆனாலும் அந்த மக்களோ, போராட்ட அமைப்புகளோ இத்திட்டத்தை செயல்படுத்த இலகுவாக அனுமதிக்க மாட்டார்கள் என்றே தோன் றுகின்றது.

இயற்கையை சுரண்டுவதிலும் இயல்பை கெடுப்பதிலும் ஆதிக்க வர்க்கம் அதிதீவிர முனைப்பு காட்டுகிறது. பாதிக்கப்பட போவது சாமானிய மக்களே. இவர்களை காப்பது யார்?





# உணவகம், சிகையலங்கார நிலையம் வவுனியாச் சிறைச்சாலையில் திறப்பு

## கைதிகளே அவற்றை நடத்துவார்களாம்

**(கே.வசந்தன்)**

வவுனியா சிறைச்சாலையில் உணவகம், சிகையலங்கார நிலையம் என்பன திறந்து வைக்கப்பட்டன. விடுதிக்கான அடிக்கல்லும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் நாட்டி வைக்கப்பட்டது.

வவுனியா ஏ9 வீதியோரமாக சிறைச்சாலையுடன் இணைந்த வளாகத்தில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா சிறைச்சாலையில் நீண்டகாலமாக தண்டனை பெற்று தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை கொண்டு உணவகம் மற்றும் சிகையலங்கார நிலையம் என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்த உணவகம் மற்றும் சிகையலங்கார நிலையம் என்பவற்றை நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளே நடத்தவுள்ளனர். அவர்கள் சிறையில் உள்ள காலத்தொ பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும், அவர்களது மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் இதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த இரு நிலையங்களையும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துசார உப்புல் தெனிய திறைந்து வைத்தார். அத்துடன், விடுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லும் நாட்டி வைக்கப்பட்டது.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் கே.ஏ.எஸ். அபயரட்ண தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துசார உப்புல் தெனிய, இராணுவத்தின் வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தினேஸ் நாணயக்கார, சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பொறுப்பதிகாரி ஏ.டீ.புத்திக்க பெரேரா, பௌத்த மதகுருமார், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை நலன் பேணும் அமைப்பினர், சிறைக் கைதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

















# கிழக்கில் கொக்கட்டிச்சோலையில் நேற்று முள்ளிவாய்கால் கஞ்சி வாரம் தொடங்கியது

(கனகராசா சரவணன்)

கிழக்கில் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கும் வாரத்தைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியினர் நேற்று சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தனர்.

2009 மே 18 முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இன படுகொலையையிட்டு மே 11 ஆம் திகது தொடக்கம் 18 ஆம் திகதி வரை கஞ்சிவாரம் என பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த பிரகடனத்தையடுத்து வருடாவரும் கஞ்சி வாரம் இடம்பெற்றுவருகின்ற நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியினர் கிழக்கில் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை மகிழடித்தீவில் 1990 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட 152 பொதுக்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவு தூபியில் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கும் வாரத்தை கட்சியின் தேசிய அமைப்பாளர் த. சுரேஸ் தலைமையில் ஆரம்பித்து வைத்தனர்.இதன் போது கடசியின் ஆதரவாளர்கள் மற்றும் அந்த பகுதியில் சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை திரண்டு முள்ளி வாய்க்கால் கஞ்சியை ஆர்வத்துடன் வாங்கிக் குடித்தனர்.

















# சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை அரோகரா கோஷத்துடன் ஆரம்பம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கையின் மிக நீண்ட கதிர்காமம் பாதயாத்திரை யாழ்ப்பாணம் செல்வசந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து நேற்றைய தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியது.

இந்துக்களின் பாரம்பரிய கதிர்காமத்திற்கான பாதயாத்திரை வழமைபோல இம்முறையும் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம் பெற்று அடியார்கள் அரோகரா கோஷங்கள் முழங்க பாதயாத்திரையை ஆரம்பித்தனர்.

கடந்த வருடத்தினை போன்று இவ்வருடமும் ஜெயாவேல்சாமி தலைமையில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரை செல்கின்றனர்.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல ஆகிய ஏழு மாவட்டங்களையும் இணைத்து 48 நாள்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து, 815 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப் புனித பாதயாத்திரை இலங்கையின் மிகமிக நீண்ட தூர பாதயாத்திரையாகக் கருதப்படுகின்றது.

கடந்த 23வருடங்களாகச் சைவமரபு பாரம்பரியத்துடன் இடம்பெற்றுவரும் இப் பாதயாத்திரை கதிர்காமக. கந்தனாலய கொடியேற்றத்தினத்தில் கதிர்காமத்தைச் சென்றடைவது வழமையாகும்.

நேற்று சந்நிதியில் அதிகாலை நடைபெற்ற விசேட பூஜையைத் தொடர்ந்து மோகன் சுவாமியால் வேலாயுதமானது கதிர்காம பாதயாத்திரைக் குழுத்தலைவர் ஜெயாவேல்சாமியிடம் சம்பிரதாய பூர்வமாக ஒப்படைக்கப்பட்டு பாதயாத்திரை ஆரம்பித்தது .

வற்றாப்பளைக் கண்ணகை அம்மனாலயத்தை அடைந்து பின்னர் அங்கிருந்து ஜெயாவேல்சாமிஅணியில் வழமையாக பயணிக்கும் நூறு பக்தர்களுடன் மீண்டும் பாதயாத்திரை இடம்பெறும்.

இதேவேளை கதிர்காம ஆடிவேல் விழா உற்சவத்திற்கான கன்னிக்கால் அல்லது பந்தல் கால் நடும் வைபவம் எதிர்வரும் மே 26ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

ஜூன் 05ஆம் திகதி கொடியேற்றம் இடம்பெற்று ஜூலை 21ஆம் திகதி எசலபெரஹராவுடனான தீர்த்தோற்சவம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

















# இன்றைய ராசி பலன்கள் - 12.05.2024




இன்று பதற்றமும் கவனமின்மையும் காணப்படும். இதனை சமாளிக்க அமை தியை மேற்கொள்ள வேண்டும். இன்று சகஜமான அணுகுமுறையுடன் உங்கள் பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடத்தில் பதட்டம் காரணமாக தாமதமாக பணிகள் நடைபெறும். பணிகளைக் கையாளும் போது பொறுமையான அணுகுமுறை தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதும் நட்பான அணுகுமுறை கொள்வதும் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்க உதவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும் . அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று ஸ்திரமான, இலக்குகளை வெல்லக்கூடிய இனிமையான தருணங் களை சந்திக்கும் நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். புதிய பணி வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பதன் மூலம் நல்லுறவு வளரும். இருவரிடையே பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படும்.

பண வரவு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் கடின உழைப்பின் காரணமாக நீங்கள் ஊக்கத்தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் உங்கள் எதிர்பார்ப் பின் படி இருக்காது. எதிர்மறையான பலன்கள் ஏமாற்றத்தை தரும். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் ஒன் றுக்கு இரண்டு தடவை யோசிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்க ளையும் பாதுகாப்பின்மை உணர்வையும் தவிர்த்தல் வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சிறந்த புரிந்துணர்வை பராமரிக்க இயலாது. உங்களின் எரிச்சல் உணர்வை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.பண வரவு குறைந்து காணப்படும்.




இன்று சவாலான சூழ்நிலைகள் காணப்படும். அதனால் வெறுமையை உணர்வீர்கள். உறுதியான போக்கை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் பிரச்சி னைகளை சமாளிக்க முடியும்.

உங்கள் கடின உழைப்பிற்கு தகுத்த பலன்கள் கிடைக்காது. இதற்குஉங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடாததே காரணம்.

உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். இதனை உங்கள் துணையிடத்தில் வெளிப் படுத்துவீர்கள்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் சேர்ந்து காணப்படும். பணப்புழக்கம் குறைவாக காணப்படும். பண இழப்புகளை தவிர்க்க நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பதற்றம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப் படும். ஆரோக்கியமாய் இருக்க இந்த உணர்வை தவிர்த்தல் நல்லது.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இந்தச் சூழலைக் திறமையாகக் கையாள முடியும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பயனுள்ள யுத்திகளைக் கையாண்டு கவனமாக பணியாற்றினால் பணிகள் சுமூகமாக நடக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. இதனால் உறவின் நல்லிணக்கத்தைக் கெடுக்கும் கவனமற்ற வார்த்தைகளை தவிர்க்கலாம்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று நீங்கள் சிறந்த மன ஆற்ற லுடனும் காடுப்பட்டுடனும் காணப்படும் சிறந்த நாள். இன்று பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் அமைதி பெறுவீர்கள்.

இன்று பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கும் சூழல் காணப்படும். பணிகளை விரும்பி எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரிடையே பரபஸ்பர மதிப்பு உயரும்.

பணப்புழக்கம் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்தை உணர்வீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் இருந்தால் உங்கள் இலக்குகளில் வெற்றி அடையலாம்.பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்தி நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில தடைகள் காணப்படும். உறுதியுடன் இருந்தால் தடைகளை சமாளித்து சிறப்பாக செயலாற்றலாம்.

தகவல் பரிமாற்ற பிரச்சினையும் கருத்து வேறுபாடும் காணப்படும். அமைதியாக இருப்பது மிகவும் உதவிகரமாக இருக்கும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. இந்து கூடுதல் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. வயிற்று உபாதை காரணமாக அவதிப்பட நேரலாம்.




அமைதியாக இருப்பதன் மூலம் முறையான முடிவுகளை எடுக்க இயலும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் பதட்டமின்றி சமநிலையில் இருக்கலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். இதனால் பணியில் தவறுகள் நேரலாம். எனினும் கவனமாகப் பணியாற்றினால் இன்று சிறப்பாக இருக்கும்.

இன்று உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை பராமரிப்பது நல்லது. இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிகரிக்கும் பொறுப்புகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள். பதற்றம் காரணமாக முதுகு வலி ஏற்படலாம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.05.2024




இன்று நீங்கள் எளிதான அணுகு முறையை மேற்கொள்ள வேண்டும். உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை. இனிமையான வார்த் தைகள் நல்ல பலனைத் தரும்.

இன்று புதிய பணி வாய்ப்புகளை இழக்கும் அதிர்ஷ்டமற்ற நிலை காணப்படும். இன்று ஏமாற்றமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இதனால் உங்கள் மன உறுதியை இழந்து விடாதீர்கள்.

உங்கள் துணையுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சூடான விவாதங்கள் ஏற்படலாம். இது மகிழ்ச்சியைக் குறைக்கும்.

இன்று பண வரவிற்கான வாய்ப்பு குறைவு. பண இழப்பு ஏற்படும் என்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.




இன்று உங்களிடம் தைரியமான உறுதியான அணுகுமுறை காணப்படும். உங்கள் இலக்குகளில் வளர்ச்சியும் வெற்றியும் அடைவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்ப தற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் செயல்திறனில் நல்ல தரத்தை பராமரிக்க இயலும்.

உங்கள் மகிழ்ச்சியான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள்.இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை இணைந்து கொண்டாடுவீர்கள்.

அதிக பண வரவு காரணமாக உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




உங்கள் மன உறுதி காரணமாக நீங்கள் வெற்றி பெறலாம். இன்று சிறந்த முன்னேற்றம் கண்டு மகிழ்வீர்கள்.

உங்கள் திறமைகள் வெளிப்படும். அது உங்கள் செயல்திறனில் பிரதிப லிக்கும். உங்கள் சக பணியாளர்களுக்கு நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருப்பீர்கள்.

இனிமையான வார்த்தைகளும் நல்ல புரிந்துணர்வும் உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றல் காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இந்த நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். அவர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் செயல்திறன் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்களுக்கு பாராட்டு கிடைக்கும்.

நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் சுமூகமான உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். உங்களிடம் இன்று மன உறுதி காணப்படும்.













# DSI சுப்பர் ஸ்போர்ட் பாடசாலை கரப்பந்து சம்பியன்ஷிப் போட்டி

இலங்கையின் கரப்பந்தாட்ட வரலாற்றில் முக்கியமானதாக கருதப்படும் நிகழ்வான 22 ஆவது **DSI Supersport Schools Volleyball Championship** ஐ ஆரம்பித்து வைப்பதற்கான அறிவிப்பை DSI விடுத்துள்ளது.

கொழும்பு 02 நிப்போன் ஹோட்டலில் மே 07ஆம் திகதி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதுதொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இலங்கை கரப்பந்து சங்கம் மற்றும் கல்வி அமைச்சின் பாடசாலை கரப்பந்து சம்மேளத்தின் ஆதரவுடன், நாட்டில் முன்னணி வகிக்கும் பாதணிகள் உற்பத்தியாளரான DSI இந்தப் போட்டிகளை ஒழுங்கமைத்து ஏற்பாடு செய்ய முன்வந்துள்ளது.

இலங்கை கரப்பந்து சம்மேளனம் மற்றும் கல்வி அமைச்சுடன் இணைந்து 1999 ஆம் ஆண்டு DSI ஆல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சம்பியன்ஷிப் போட்டியின் நோக்கம் கிராமிய மற்றும் நகர்ப்புற கரப்பந்து வீரர்களுக்கு ஒரு வாய்ப்பையும் தேவையான ஆதரவையும் வழங்குகின்றது.

கரப்பந்து வீரர்களுக்கு தேசிய தரத்தில் ஒரு தளத்தையும் வழங்கி தேசிய மற்றும் சர்வதேச அரங்கில் அவர்களின் திறமைகளை வெளிக்காட்டவும். மேலும் அவர்களின் தொழில்சார் வாழ்க்கையினை மேம்படுத்த உதவுவதே இதன் நோக்கம் ஆகும். தொடக்க நிலையிலிருந்து மொத்தம் 198 அணிகள் இந்தப் போட்டியில் பங்கேற்கின்றன,

பாடசாலைகளின் கரப்பந்து சம்பியன்ஷிப் கிட்டத்தட்ட 400 விளையாட்டு வீரர்களின் வளர்ச்சிக்கு பங்களித்துள்ளது. இந்த ஆண்டு, நாடு முழுவதிலுமிருந்து 4,000 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்கும் என ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

போட்டிக்கான விண்ணப்பங்கள் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து னுளுஐ காட்சியறைகளிலும் கிடைக்கும். மேலதிக விபரங்களுக்கு, விண்ணப்பதாரர்கள் 011-2669344 எனும் இலக்கத்துடன் இலங்கை கரப்பந்து சம்மேளனத்தை தொடர்பு கொள்ளலாம். 25 மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், செயலாளர் - பாடசாலை கரப்பந்து சங்கம் ஆகியன 0773329702 எனும் இலக்கத்துடன் சி.எல். குமாரவை தொடர்பு கொள்ளவும். அல்லது இலங்கை கரப்பந்து சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஏ.எஸ். நாலகவை **asnalaka@gmail.com** எனும் முகவரி மூலம் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.












# இலங்கை வங்கி பிட்ட பிட்ட ரட்ட பகுதி 3 இன் பரிசுகள் அறிவிப்பு

இலங்கை வங்கி பிட்ட பிட்ட ரட்ட தாகி பகுதி 3இன் பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய ஒரு சொகுசு வில்லா உட்பட 50 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

தென் கொரியாவிலிருந்து வெளிநாட்டு நாணயங்களை அனுப்பி இலங்கை வங்கித்துறை வரலாற்றில் 30 மில்லியன் மதிப்புள்ள முற்றிலும் தளவாடங்கள் இடப்பட்ட சொகுசு வீடு என்ற மாபெரும் பரிசை கே.கே. ருவன் சிந்தக்க வென்றுள்ளார்.

அவருக்கு இலங்கை வங்கி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.



























# AIA இன்சூரன்ஸ் தமது புதிய அலுவலகத்தை பண்டாரவளை நகரில் திறந்து வைத்தது

AIA இன்சூரன்ஸ் லங்கா, அதன் விநியோக வலையமைப்பை விரிவுபடுத்தும் முயற்சியில் மேலும் ஒரு படி முன்னேறி, பண்டாரவளை நகரில் புத்தம் புதிய AIA அபிவிருத்தி அலுவலகத்தை அண்மையில் திறந்து வைத்துள்ளது.

சகல வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த அலுவலகத்தின் மூலம் பண்டாரவளை பிரதேச மக்கள் அற்புதமான காப்புறுதி அனுபவங்களை அனுபவிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்த அபிவிருத்தி அலுவலகம் இல. 451, பதுளை வீதி, பண்டாரவளையில் அமைந்துள்ளது. வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு அறிவு மற்றும் பயிற்சி பெற்ற காப்புறுதி நிபுணர்கள் குழுவினால் சேவையாற்றப்படுகிறது.

அத்துடன், ஆயுள் காப்புறுதி, தேகாரோக்கிய காப்புறுதி, ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் முதலீட்டுத் தீர்வுகள் பொதுமக்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களின் எதிர்கால நிதி பாதுகாப்பை உறுதி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது

# யூனியன் வங்கியின் Digital Zone தற்போது புறக்கோட்டையில்






யூனியன் வங்கி தனது புதிய னபைவையட zone ஐ கொழும்பு புறக்கோட்டை பகுதியில் திறந்துள்ளது.

இதனூடாக வாடிக்கையாளர்களுக்கு 24/7 ஸ்மார்ட் வங்கியியல் சேவைகளை அனுபவிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வங்கியின் தொடர்ச்சியான டிஜிட்டல் மேம்படுத்தல் செயற்திட்டங்களின் அங்கமாக இந்த புதிய அறிமுகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தஅறிமுகநிகழ்வில், புறக்கோட்டைகிளையின்பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுடன், Zone 1A வலய தலைமை அதிகாரி கசுன் டி சில்வா மற்றும் Trade Hub பிரிவு தலைமை அதிகாரி பிராங்க் நேசராஜா ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.